## VBS ஆசிரியர்கள் கவனத்திற்கு

✷ குழந்தைகளின் வயது, மனநிலைக்கு ஏற்ப

1. முதல் குழு - ஆர்வ நிலை (பாலர் வகுப்பு, 1, 2 வகுப்புகள்)
2. இரண்டாம் குழு - தொடக்க நிலை (3, 4, 5 வகுப்புகள்)
3. மூன்றாம் குழு - இளநிலை (6, 7, 8 வகுப்புகள்)
4. நான்காம் குழு - முதுநிலை (9, 10, 11 வகுப்புகள்)

என்று தனித்தனியாக ஆசிரியர் கையேடுகள், மாணவர் பயிற்சி ஏடுகள் உண்டு. மேலும், வருகைப் பதிவு படம், பாடல் ஏடு, பேட்ஜ், தொடர் கதை நூல், ஒலிக்குறுந்தகடு (CD), திரைப்பட DVD ஆகிய துணைக்கருவிகளும் உள்ளன.

✷ பரிந்துரைக்கப்படும் மாதிரிக் கால அட்டவணை

| | | |
|---|---|---|
| 09-00 | - | ஆசிரியர்கள் கூடிச் செபித்தல் |
| 09-15 | - | பொதுவான பாடல்பயிற்சி |
| 09-45 | - | மாணவர்கள் கூடிச் செபித்தல் |
| 10-00 | - | குழுப் பாடவேளை - I - *(அந்த நாளுக்குரிய இறைவார்த்தைப் பாடத்தைத் தகுந்த தயாரிப்புடன் துணைக்கருவிகளுடன் குழுக்களில் ஆசிரியர் நடத்துகிறார்)* |
| 10-45 | - | இடைவேளை - சிற்றுண்டி வழங்குதல் |
| 11-00 | - | குழுப் பாடவேளை - II - *(குழுக்களில் விடை எழுதுதல், மனப்பாடம் ஒப்புவித்தல், வருகைப் பதிவு படம் ஒட்டுதல், வர்ணம் தீட்டுதல்)* |
| 11-45 | - | பொதுவான விளையாட்டு |
| 12-00 | - | பொதுவான பாடல்பயிற்சி |
| 12-15 | - | பொதுவான தொடர்கதை |
| 12-30 | - | நிறைவு செபம், திறனாய்வு, திட்டமிடல். |

✷ **ஆசிரியர்களும் மாணவர்களும் தினமும் திருவிவிலியம் கொணர்தல் வேண்டும்.**

© *தயாரிப்பு:* **செயலர், தமிழக விவிலியப் பணிக்குழு, திண்டிவனம் 604 001**
*வெளியீடு:* **இயக்குநர், தமிழக முப்பணி நடுநிலையம், திண்டிவனம் - 604 001**


மறுமுறை

முதலாம் ஆண்டு (A)

# விவிலியக் கல்வி VBS ஆசிரியர் கையேடு

**இரண்டாம் குழு – தொடக்க நிலை *(3, 4, 5* வகுப்புகள்*)***

# மாபெரும் அழைத்தல்கள்



முதலாம் ஆண்டு (A)

# VBS ஆசிரியர் கையேடு

## இரண்டாவது குழு - தொடக்க நிலை

### 3, 4, 5 வகுப்புகள்

## மாபெரும் அழைத்தல்கள்

முதல் நாள்

## 1. ஆபிரகாமின் அழைப்பு

### பாகம் –1 பாடப் போதனா முறை

### இறைவார்த்தை

தொடக்க நூல் 12:1-9

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- ஆபிரகாம் தம் சொந்த ஊரையும் இனத்தாரையும் விட்டு, கடவுள் கூறிய நாட்டுக்குச் சென்றார்.
- மகப்பேறு இல்லாத ஆபிரகாம் குடும்பத்திற்கு வாக்குறுதியின் மகனாக ஈசாக்கு அளிக்கப்பட்டார்.
- கடவுள் ஆபிரகாமை கணக்கற்ற பிள்ளைகளுக்குத் தந்தையாக்கினார்.

### மனநிலை

- இறைவனுக்காக எதை இழக்கிறோமோ அதற்குப் பதிலாக இறைவனிடமிருந்து பன்மடங்கு அருளைப் பெறுவோம்.
- என்னையும் மற்றவர்களுக்குப் பயனுள்ள கருவியாக்க இறைவன் அழைக்கின்றார்.

**1. தொடக்கச் செபம்**

அன்பு இறைவா! அன்று ஆபிரகாமை அழைத்து, அவர் மூலம் எல்லா மக்களுக்கும் ஆசியை வழங்கினீர். அவர் பாதையில் நாங்களும் நடந்து மற்றவர்களுக்கு நன்மை செய்யும் நல்லவர்களாக வாழ அருள் தாரும்.



**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

ஒரு கிராமத்தில் பாபு, பாமா என்ற தம்பதியர் இருந்தனர். அவர்கள் செல்வமிக்கவர்களாக வாழ்ந்து வந்தனர். அக்குடும்பத்தினருக்கு 13 வருடங்களாகக் குழந்தையில்லை. பல கோவில்களுக்குச் சென்று இறைவனை வேண்டி வந்தார்கள். மருத்துவ சிகிச்சையையும் நம்பிக்கையோடு பெற்று வந்தார்கள். இறுதியில் அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு மஞ்சு என்று பெயரிட்டனர். அந்தப் பெற்றோரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. குழந்தை பிறந்த அன்று அதிக செலவில் பெரிய விருந்தொன்று வைத்தார்கள்.

மஞ்சு மூன்றாம் வகுப்புப் படிக்கும் போது அவளை ஒரு நோய் தாக்கியது. உடனே பெற்றோர் அவளை அவ்வூரில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தார்கள். நோய் முற்றிய நிலையில் அவளுக்கு மஞ்சள் காமாலை நோய் எனக் கண்டறிந்தனர். காலம் கடந்து போயிற்று. ஆகவே சிகிச்சை பலனின்றி மஞ்சு இறந்துவிட்டாள். பெற்றோரின் துயரத்திற்கு அளவே இல்லை. வருடங்கள் பல உருண்டோடின. தற்போது அவளது பெற்றோர் தங்கள் மகள் மஞ்சு பிறந்த மற்றும் இறந்த தினங்களில் ஆதரவற்ற பிள்ளைகள் வசிக்கும் கருணை இல்லத்திற்குச் சென்று உதவி வருகிறார்கள். “கருணை இல்லக் குழந்தைகள் எங்கள் குழந்தைகள்” எனக்கூறி கொஞ்சி மகிழ்கின்றனர்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- பாபு, பாமா என்ற தம்பதியருக்கு என்ன குறையிருந்தது?
- மஞ்சுவுக்கு என்ன நேர்ந்தது?
- கருணை இல்லக் குழந்தைகளுக்கு பாபு, பாமா ஏன் உதவி செய்தனர்?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

எனது நலம், எனது குடும்ப நலம் என்ற குறுகிய வட்டத்தைக் கடக்க வேண்டும், அனைவருக்கும் உதவும் தொண்டு உள்ளம் நமக்கு இருந்தால் நம் துயரம் மகிழ்ச்சியாகும்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

தம் சொந்த வீட்டையும், சொந்த நாட்டையும் விட்டு விட்டு இறைவன் காட்டிய நாட்டிற்கு ஆபிரகாம் சென்றார். இறைவனின் வாக்குறுதியின்படியே நிறைவாக எல்லா விதத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டார்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

ஆசிரியர் மறைநூலை உயர்த்திப் பிடித்துவர, அவருக்கு முன்பாக மாணவ மாணவியர் இருபுறமும் வரிசையாக “தெய்வ மக்கள்

பாடுவோம்” என்ற பாடலைப் பாடிக்கொண்டும் கைகளைத் தட்டிக் கொண்டும் பவனியாக வருவர். அலங்கரிக்கப்பட்ட மேடையில் விவிலியம் அரியணை ஏற்றப்படும். தீப, தூப மலர் அஞ்சலி நடைபெறும்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

தொடக்க நூல் 12:1-9

**8. இறைவார்த்தை விளக்கம்**

- ❖ ஆபிரகாமின் சொந்த ஊர் ‘ஊர்’ என்ற ஊராகும்.
- ❖ ஆபிரகாமின் தந்தை பெயர் தெராகு.
- ❖ ஆபிரகாமின் சகோதரர் பெயர் லோத்து.
- ❖ ஆரானில் இருந்தபோது ஆபிரகாமைக் கடவுள் அழைத்தார்.
- ❖ ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி “உன் நாடு, உன் இனம், இவற்றுடன் உன் தந்தையின் வீட்டாரையும் விட்டு விட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல்ல வேண்டும்” என்றார்.
- ❖ ஆண்டவர் ஆபிரகாமை அழைத்தபோது “உன்னைப் பெரிய இனமாக்குவேன். உன் பெயரைச் சிறப்புறச் செய்வேன். உன் வழியாக மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்...” என்று ஏழு வாக்குறுதிகள் கொடுத்தார்.
- ❖ ஆபிரகாம் மறுமொழி எதுவும் சொல்லாமல் தமது 75வது வயதில் தனது மனைவி சாராவையும் தம் சகோதரர் லோத்துவையும் அழைத்துக் கொண்டு கானான் நாட்டிற்குச் சென்றார்.
- ❖ தனக்கு ஒரு குழந்தை இல்லாத நிலையில் “உன்னைப் பெரிய இனமாக்குவேன்” என்ற ஆண்டவரின் வார்த்தையை நம்பிப் பயணமானார்.
- ❖ ஆபிரகாமுக்கு ஆண்டவர் கூறியபடியே ஈசாக்கு என்ற ஒரு மகன் பிறந்தார்.
- ❖ இயேசு கிறிஸ்து ஆபிரகாமின் மகன் எனப்படுகிறார் (மத் 1:1).
- ❖ இயேசு சக்கேயுவைச் சந்தித்த போது, இவரும் ஆபிரகாமின் மகனே என்றார் (லூக் 18:9).
- ❖ இன்று உலக முழுவதும் உள்ள மக்கள், ஆபிரகாமின் மக்கள் எனப்படுகின்றனர்.

**9. உய்த்துணரச் செய்தல்**

- ♦ ஆண்டவர் தந்த வாக்குறுதியை ஆபிரகாம் நம்பினார்.
- ♦ சோதனைகள் வந்தபோதும் ஆபிரகாம் உறுதியுடன் இருந்தார்.
- ♦ கடவுள் தமது வாக்குறுதியை நிறைவேற்றினார்.



## பாகம் – 2 கலை வழிப் பயிற்சி

**1. நாடகம்**

கதாபாத்திரம் : அபி, சபி

**அபி:** தொட்டால் பூ மலரும் .... (பாடல்) (கையில் பூ (ரோஜா) ஏந்தியபடி பாடி வருகிறான்.

**சபி:** தொடாமல் நான் மலர்வேன். (சபி - அபியை நோக்கி ஆவலுடன் வருகிறாள்)

**அபி:** ஹலோ சபி

**சபி:** ஹாய் அபி

**அபி:** சபி உனக்கொரு நல்ல செய்தி எங்க அப்பா நம்ப கல்யாணத்திற்கு சம்மதம் தெரிவிச்சிட்டார்.

**அபி:** (பைபிளை சபியிடம் கொடுத்து) இப்படித்தான்

**சபி:** என்ன இது? நாம ஜாலியா இருக்க வேண்டிய நேரத்தில் பைபிளை கொடுத்து

**அபி:** அய்யோ! அய்யோ

**சிபி:** என்ன ஆய்யோ! நொய்யோ

**அபி:** இந்த பைபிளை காட்டிதான் எங்க அப்பாகிட்ட சம்மதம் வாங்கினேன்.

**சபி:** எப்படி?

**அபி:** தொநூ 12: 1-9 வாசித்து எனக்கு ஒரு நல்ல முடிவு சொல்லுப்பானு சொன்னேன்.

**சபி:** அப்புறம்

**அபி:** ஆபிரகாம் தன் நாட்டைவிட்டு, வீட்டைவிட்டு கடவுள் காட்டிய நாட்டிற்கு சென்றாரே ... அதேபோல தாம்பா என்னுடைய காதலி சபையையும் கடவுள் எனக்கு 2 வருசத்திற்கு முன்னாடி நம்ம கோவில காண்பிச்சு இவளே உன் மனைவினு சொன்னாரு என்றேன். உடனே சரிப்பா. நாளைக்கு பெண் பார்க்க போலம்னு சொல்லிட்டாரு.

**சபி:** எங்களை இணைத்து வைத்த கடவுள் வாழ்க! எங்களுக்கு வழிகாட்டிய ஆபிரகாம் வாழ்க! வாழ்க! வாழ்க! நன்றி வணக்கம்.

**2. வினாடி வினா**

1. ஆபிரகாம் சகோதரர் யார்? **லோத்து**
2. ஆபிரகாம் மனிவியின் பெயர் என்ன? **சாரா**
3. ஆண்டவர் யாரை பெரிய இனமாக்கினார்? **ஆபிரகாம் வழி மரபினரை**

4. ஆபிரகாம் முதலில் எந்த நாட்டை அடைந்தார்? **கானானியர் நாடு**
5. ஆபிரகாம் படிப்படியாக எதை நோக்கி பயணம் செய்தார்? **நெகேபு**
6. ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்களித்த நாடு எது? **கானான் நாடு**
7. ஆபிரகாம் எதில் குடியிருந்தார்? **கூடாரத்தில்**
8. ஆபிரகாம் எப்படி தொழுதார்? **பலி பீடம் கட்டி**
9. ஆபிரகாம் தன்னோடு எதை எடுத்துச் சென்றார்? **செல்வம், ஆட்கள்**
10. ஆபிரகாம் எப்பகுதியில் எந்த மரத்தை அடைந்தார்? **செக்கேமில் உள்ள மோரேயின் கருவாலி மரத்தை அடைந்தார்.**

### 3. விளையாட்டு

**நடத்துனர்:** 1) **ஆபிரகாம்** என்று கூறுவார். அப்போது மாணவர்கள் நடந்து செல்வர்.

2) **கருவாலி** என்று கூறுவார். மாணவர்கள் களைப்பாறுதல் போல் உட்கார்தல்.

3) **லோத்து** என்று கூறுவார். அப்போது மாணவர் ஒருவர் ஒருவரின் கையைக் குலுக்குவர்.

**தலைவர்:** மூன்றையும் மாற்றி மாற்றிக் கூறுவர். தவறாக செய்வோர் அவுட் ஆகிவிடுவர். இறுதியில் வெற்றிப்பெற்றோருக்கு பாராட்டுதல் அல்லது பரிசு வழங்கலாம்.

### 4. சரியா? தவறா? வளைவு கோட்டில் அடையாளமிடுக

1. ஆபிரகாமுடன் லோத்து செல்லவில்லை ( )
2. ஆபிரகாம் ஆரானை விட்டுச் சென்றபோது அவருக்கு வயது எழுபத்தைந்து ( )
3. ஆபிரகாம் தம் மனைவி சாராவை அழைத்துச் செல்லவில்லை ( )
4. ஆண்டவருக்கு ஆபிரகாம் பலிபீடம் எழுப்பவில்லை ( )
5. உனக்கு ஆசி கூறுவோர்க்கு நான் ஆசி வழங்கமாட்டேன் ( )

**விடை: 1. தவறு 2. சரி 3. தவறு 4. தவறு 5. தவறு**



இரண்டாம் நாள்

## 2. மோசேயின் அழைப்பு
## பாகம் –1 பாடப் போதனா முறை

### இறைவார்த்தை

விடுதலைப் பயணம் 3:1-12

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் பார்வோன் ஆட்சியில் கடும் துன்பங்களை அனுபவித்தனர்.
- இஸ்ரயேல் மக்களின் கூக்குரலைக் கடவுள் கேட்டறிந்தார்.
- கடவுள் அந்த மக்களைத் துன்பத்திலிருந்து விடுவிக்க மோசேயை அழைத்தார்.
- மோசே இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்துக் கானான் நாட்டை நோக்கி வழிநடத்தினார்.

### மனநிலை

- கடவுளின் கட்டளைகளைக் கடைபிடிக்கும்போது ஏற்படும் தடைகளைப் பொறுமையாக ஏற்று முன்னேறுவேன்.
- சமூகத்தில் நிலவும் அநீதிகளை பெரியவர்கள் துணையோடு அகற்ற முன்வருவேன்.

### 1. தொடக்கச் செபம்

**பாடல் :** *இயேசு அழைக்கிறார் (2)*
*ஆவலாய் தம் கரத்தை நீட்டி*
*அன்பாய் அழைக்கின்றார்*

**செபம் :** மோசேயை அழைத்த இறைவா! உமது பணிக்காக என்னையும் அழைத்துக் கொள்ளுமாறு என்னை முழுவதுமாக அர்ப்பணிக்கிறேன்.

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

சுயநிதிக் கல்வி நிறுவனம் ஒன்றில் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் 34 பேர் பணி செய்து வந்தார்கள். அவர்களில் ஒரு கிறிஸ்துவ ஆசிரியரும் பணியாற்றினார். இப்பணியாளர்களுக்குக் கல்விப்பணி மட்டுமல்லாமல் நிறுவனத்தின் பிற பணிகளும் கொடுத்துத் துன்புறுத்தினார்கள். மேலும், குறைந்த ஊதியமே அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிறுவனத்தினுடைய தாளாளர், தம் பணியாளர்களைக் கசக்கிப் பிழிவதைக் கண்டு கிறிஸ்துவ ஆசிரியர் மனம் வெதும்பினார். ஆசிரியர்களுடைய தேவைகளையும் துயரங் களையும் தாளாளரிடம் எடுத்துச் சொன்னார். ஆனால் தாளாளரோ கிறிஸ்துவ ஆசிரியரின் பணியில் குற்றம் கண்டுபிடித்து அவரை

வெளியேற்ற விரும்பினார். ஆனால் இவரோ பணியில் உண்மையும் நேர்மையும் உள்ளவராக இருந்ததால் குறைகாண முடியவில்லை. மனம் திருந்திய தாளாளர் குறைகளை நிவர்த்தி செய்து ஊதிய உயர்வும் கொடுத்து பணியாளர்கள் முகத்தில் புன்னகையை வரச் செய்தார்.

### 3. அடையாளத்தை அலசுதல்

- ஆசிரியர்களும் பணியாளர்களும் ஏன் துயரத்திற்கு உள்ளானார்கள்?
- இவர்களின் துன்பம் நீங்க பாடுபட்டவர் யார்?
- இந்நிகழ்வு பற்றி உங்கள் கருத்து என்ன?

### 4. வாழ்க்கை மதிப்பீடு

பொது நலத்தோடு நன்மை செய்ய முற்படும்போது துன்பங்கள் நேரிடும். மனம் தளராமல் தொடர்ந்து பாடுபட வேண்டும்.

### 5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்

எகிப்தில் பார்வோன் மன்னனின் ஆட்சியில் இஸ்ரயேலர் அடிமைகளாக வாழ்ந்து வந்தனர். அவர்களை விடுவிப்பதற்காக மோசேயை இறைவன் அழைத்தார். அவரது அழைப்பு மற்றும் பணி பற்றிய இறைவார்த்தையைக் கேட்போம்.

### 6. இறைவார்த்தைக்கு அஞ்சலி

அலங்கரிக்கப்பட்ட மேசையில் விவிலியத்தை அரியணை யேற்றுக. மாணவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்து விவிலியத்தைச் சுற்றி வட்டமாக நிற்கவும். முதல் குழுவினர் கைகளில் தீபமும், 2 வது குழுவினர் கைகளில் தூபமும், 3 வது குழுவினர் கைகளில் மலர்களும் வைத்து அஞ்சலி செய்வர். அஞ்சலி செய்யும்போது பின்வருமாறு பாடுக.

**ஒளி** : *ஒளிமயமான இறைவார்த்தையே போற்றி!*

**தூபம்** : *நறுமணம் தரும் இறைவார்த்தையே போற்றி!*

**மலர்கள்** : *மகிழ்வூட்டும் மலர்களாம் இறைவார்த்தையே போற்றி!*

### 7. இறைவார்த்தை முழக்கம்

விடுதலைப் பயணம் 3:1-12

### 8. இறைவார்த்தை விளக்கம்

- யாக்கோபு என்ற இஸ்ரயேலும் அவரது வழி மரபினரும், எகிப்துக்குச் சென்று பலுகிப் பெருகினர்.
- எகிப்தின் பஞ்சகாலத்தில் பசியின்றி வாழச் செய்த யோசேப்பை அறியாத புதிய மன்னன் எகிப்தை ஆட்சி செய்தான்.
- எகிப்தியர் இஸ்ரயேல் மக்களைக் கொடுமைப்படுத்தி வேலை வாங்கினர். கடினமான சாந்து, செங்கல் வேலையாலும் அனைத்து வயல்வெளி வேலைகளாலும் இஸ்ரயேல் மக்கள் துன்பப்பட்டனர். வாழ்க்கையை வெறுக்கும் நிலையில் இருந்தனர்.
- இஸ்ரயேலரின் எண்ணிக்கை பெருகிவிடாதபடி இவர்களுக்குப் பிறக்கின்ற ஆண் குழந்தைகளைக் கொன்று விட வேண்டு மென்று பார்வோன் மன்னன் மருத்துவப் பெண்களுக்குக் கட்டளை பிறப்பித்தான்.
- இப்படிப்பட்டச் சூழ்நிலையில் லேவி குலப் பெண் ஒருத்திக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. மூன்று மாதம் மறைத்து வைத்திருந்த பின் ஒரு நாணற் கூடை செய்து குழந்தையை நைல் ஆற்றில் விட்டார். பார்வோன் மன்னனின் மகள் ஆற்றிற்குக் குளிக்க வந்தபோது நாணல் கூடையைக் கண்டாள். அதைத் திறந்து பார்த்து, அழகான ஆண் குழந்தையைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தாள்.

  தண்ணீரில் இருந்து இவர் எடுக்கப்பட்டதால் மோசே என்று அழைக்கப்படுகிறார். தன் அரண்மனைக்குக் கொண்டு சென்று குழந்தையை வளர்த்தாள். அரண்மனையிலேயே மோசே வளர்ந்து பெரியவரானார். மோசே நகர் வலம் வந்தபோது எகிப்தியன் ஒருவனைக் கொன்று போட்டார். இச்செய்தி கேட்டு பார்வோனும் மோசேயைக் கொலை செய்யத் தேடினான். மோசே பார்வோனிடம் இருந்து தப்பி, மிதியான் நாட்டில் வாழும் தன் மாமா இத்திரோவிடம் சென்று, ஆடு மேய்க்கும் தொழிலைச் செய்து வந்தார்.
- எரியும் முட்புதரின் நடுவே ஆண்டவரின் தூதர் தோன்றினார். மோசே இதைப் பார்த்தபோது முட்புதர் எரிந்து கொண்டிருந்தது. “முட்புதர் தீய்ந்து போகாமல் எரிவதை நான் பார்ப்பேன்” என்று அருகில் சென்றார். கடவுளின் பிரசன்னம் அங்கே இருந்ததால் “மோசே, மோசே” என்று அவரை அழைத்தார். ‘இதோ நான்’ என்று அருகில் சென்றார். “உன் பாதங்களில் இருந்து மிதியடி களை அகற்றிவிடு; ஏனெனில் நீ நின்று கொண்டிருக்கும் இந்த இடம் புனித நிலம்” என்றார் கடவுள். மேலும் “இஸ்ரயேலராகிய நம் மக்கள் படும் துன்பங்களை நாம் கண்டுள்ளோம். அவர்கள் எகிப்திலிருந்து புறப்படும் பொருட்டு உன்னைப் பார்வோனிடம் அனுப்புவோம்” என்றார். தயங்கிய மோசேக்குக் கடவுள் உறுதி கொடுத்தார். “நாம் உன்னோடு இருப்போம்; நம் மக்களை எகிப்திலிருந்து வெளியேறச் செய்த பின்னரே இம்மலையின் மீது நீ பலியிடுவாய்; இதுவே நாம் உன்னை அனுப்பினோம் என்பதற்கு அடையாளமாகும் என்றார் கடவுள். மோசேயும் கடவுள் சொற்படி நடந்து இஸ்ரயேல் மக்களை விடுவித்து கானான் நாடு நோக்கி வழிநடத்திச் சென்றார்.

## இயேசுவுக்கும் மோசேக்கும் உள்ள தொடர்பு :

| இயேசு | மோசே |
| --- | --- |
| 1. மலைப் பொழிவு தந்தார். | 1. பத்துக் கட்டளைகள் பெற்றுத் தந்தார். |
| 2. பிறப்பின்போது ஆண் குழந்தைகள் கொல்லப்பட்டனர். | 2. ஆண் குழந்தைகள் நைல்நதியில் எறியப்பட்டனர். |
| 3. பாடுகள் மரணம் உயிர்ப்பு உலக மக்களுக்கு மீட்புத் தந்தது. | 3. இஸ்ரயேல் மக்களுக்கு வாழ்வு தந்தது. |
| 4. உலக மக்களின் விடுதலைக்காக வந்தார். | 4. இஸ்ரயேல் மக்களின் விடுதலைக்காக வந்தார். |
| 5. ஆன்மீக விடுதலை தந்தார். | 5. அரசியல் விடுதலை தந்தார். |

### 9. உய்த்துணரச் செய்தல்

* கடவுள் அழைத்தபோது, மோசே கீழ்ப்படிந்தார்; துணிவுடன் விடுதலைக்காகப் போராடினார்.
* துயரத்தில் கதறுவோரின் கூக்குரல் கேட்பேன்; என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன்.

## பாகம் – 2 கலை வழிப் பயிற்சி

### 1. குறுக்கெழுத்து

| | | | | | |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1 | 2 | | | | |
| | | 10 | | | |
| | | | 3 | | |
| | | | | 12 | |
| | | | | 6 | |
| | | | | | 8 5 |
| 4 | 11 | | | | |
| 7 | | | | | 9 |



### மேலிருந்து கீழ்

1. கடவுள் ----- நடுவிலிருந்து அவரை அழைக்க

3. ----- அவர்களுக்கு இழைக்கும் கொடுமையும் கண்டுள்ளேன்.

### கீழிருந்து மேல்

4.----- உன்னோடு இருப்பேன்.

5. அதாவது கானானியர் -----எமோரியர் பெரிசியர்

9. அழைத்துப் போவதற்கும் ----- யார்?

### இடமிருந்து வலம்

2. இந்த இடம் ----- நிலம் என்றார்.

7. மோசே, கடவுளை ----- நோக்க அஞ்சியதால்

10. மோசே மிதியானின் அர்ச்சகராகிய தம் -----

11. ----- இஸ்ரயேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டியுள்ளது.

### வலமிருந்து இடம்

6. ----- ஆண்டவர் கூறியது.

8. ----- ஆட்டு மந்தையை மேய்த்து வந்தார்.

12. ----- யரின் பிடியிலிருந்து அவர்களை விடுவி.

| | | | | | |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1 மு | 2 பு | னி | த | மா | ன |
| ட் | | 10 மா | ம | னா | ர் |
| பு | | | 3 எ | | ய |
| த | தி | ப் | கி | 12 எ | தி |
| ரி | து | போ | ப் | 6 அ | த் |
| ன் | வி | ரோ | தி | த் | 8 இ 5 |
| 4 நா | 11 இ | தோ | ய | | ன் |
| 7 உ | ற் | று | ர் | | நா 9 |

**மேலிருந்து கீழ்**

1. முட்புதர் 3. எகிப்தியர்

**கீழிருந்து மேல்**

4. நான் 5. இத்தியர் 9. நான்

**இடமிருந்து வலம்**

2. புனிதமான 7. உற்று

10. மாமனார் 11. இதோ

**வலமிருந்து இடம்**

6. அப்போது 8. இத்திரோவின்

12. எகிப்தி

**2. மறைந்திருக்கும் வார்த்தைகளைக் கண்டுபிடி**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மோ | | | | | |
| ஓ | சா | கி தோ | பு | ட் | பு | | | |
| ட | ன | ஈ மு | ஆ | ன் | ர் | க் | | |
| ரி | எ | கி | ண் | சே | ரே | ர் | இ | மை |
| ப் | த | சி | வ | டி | | | | |
| பூ | ய | தி | எ | ய | அ | ர் | | |

**விடைகள்:** 1. மோசே 2. ஓரேபு 3. முட்புதரின் 4. ஈசாக்கின் 5. ஆண்டவர் 6. எகிப்தியர் 7. எபூசியர் 8. அடிமை 9. இதோ

### 3. விடுகதை


1. ஓடுவான், தின்பான், படி போடுவான் இரண்டெழுத்து உடையது எது? **ஆடு**
2. பார்க்க பெரியவன், நாம் அழைத்தால் திருப்பி அழைப்பான் அவன் பெயர் என்ன? **மலை**
3. பார்ப்பதற்குப் பச்சை பட்டுவிட்டால் எரியவில்லை. அதிசயமே அதிசயம் அது என்ன? **மோசே எரியும் முட்செடி.**
4. கருணை கொண்டவன், காணமுடியாதவன், கேட்டவரம் கொடுப்பவன் அவன் யார்? **ஆண்டவன்**
5. தீயின் மூலம் மேய்ப்பனைக் கண்டான். அவன் யார்? **மோசே**

### 4. விளையாட்டு

நடத்துனர்: மாணவர்களை குழுக்களாகப் பிரித்து தனித்தனியே நிறுத்த வேண்டும்.

நடத்துனர் ஒரு பொருளைச் சொல்ல. இரு குழுவினரும் ஓடி சொல்லப்பட்ட பொருளை எடுத்து வந்து நடுவரிடம் கொடுக்க வேண்டும். எந்தக் குழு அதிகமாகச் சேர்க்கின்றதோ அதுவே வெற்றிப் பெற்றும் குழுவாகும்.

### 5. இப்படத்திற்குப் பொருத்தமான இறைவ



குழந்தையை அதனுள் வைத்து நைல் நதிக் கரையிலுள்ள நாணல்களுக்கிடையில் விட்டு வைத்தாள் (விப 2:3).



மூன்றாம் நாள்

## 3. யோசுவாவின் அழைப்பு

## பாகம் –1 பாடப் போதனா முறை

### இறைவார்த்தை

யோசுவா 1:1-9; 5:13-15

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- மோசேக்குப் பின் இஸ்ரயேல் மக்களை வழிநடத்த யோசுவாவைக் கடவுள் தேர்ந்தெடுத்தார்.
- யோசுவா இறைபற்றும் மனத்திடனும் உடையவர்.
- மோசேயுடன் இருந்த இறைவன் யோசுவாவுடனும் இருப்பதாக வாக்களித்தார்.

### மனநிலை

- மற்றவர்களுக்கு உதவி செய்யவும், கற்றுக் கொடுக்கவும் கூடிய நல்ல பண்பை வளர்த்துக் கொள்வேன்.
- இறைவன் என்னிடம் எதிர்பார்ப்பதைச் செய்ய என்னை அழைக்கிறார் என்பதை உணர்ந்து வாழ்வேன்.

#### 1. தொடக்கச் செபம்

யோசுவாவை அழைத்த இறைவா! என்னையும் உம் கருவியாக அழைத்துள்ளீர். நான் உம் கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும், அதன்படி மற்றவர்களை வழிநடத்தவும் வேண்டிய தூய ஆவியின் ஆற்றலை எனக்குத் தாரும்.

#### 2.அடையாளத்தை அறிமுகம் செய்தல்

சுபாஷ் ஒரு சமூக சேவகர். அவருடைய மகன் சுரேந்திரன். தன்னைப் போலவே தன் மகனையும் பொது நல நோக்கோடு வளர்த்தார் சுபாஷ். அவர்கள் வாழ்ந்த பகுதியில் நூற்றுக்கும் அதிகமான மீனவர்கள் குடிசை அமைத்து வாழ்ந்து வந்தனர். அப்பகுதியின் முக்கிய அரசியல்வாதி ஒருவர் அந்த இடம் தனக்குரியது என்று போலிப் பட்டாவைக் காண்பித்துக் குடிசைகளை அப்புறப்படுத்தச் சொன்னார். மக்கள் அனைவரும் பொதுநலவாதியான சுரேந்திரனை அணுகினர். சுரேந்திரன் தன் தந்தையைப் போன்றே அப்பகுதி தாசில்தாரை அணுகி மனு ஒன்றைக் கொடுத்தார். அரசியல்வாதியின் தலையீட்டால் மனு செயலற்றுப் போயிற்று. ஆயினும் சுரேந்திரன் மக்களைத் திரட்டி அமைதி வழியில் போராடினார். அரசியல்வாதி கோபம் கொண்டு மிரட்டினார். சுரேந்திரன் எதற்கும் பயப்படவில்லை. இறுதியில் மக்கள் வெற்றி பெறுகின்ற வேளையில்

அரசியல்வாதியின் அடியாட்கள் சுரேந்திரனை அடித்து உதைத்துக் காயப்படுத்திக் குற்றுயிராய் விட்டுச் சென்றனர்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- சுரேந்திரன் மக்களை எப்படி வழிநடத்தினார்?
- சுரேந்திரனுக்கு நிகழ்ந்தது என்ன?
- நீங்கள் தலைமைப் பொறுப்பேற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**4. வாழ்க்கை மதிப்பீடு**

- பொது நல நோக்கமுடையவர்கள் எதிர்ப்பைக் கண்டு அஞ்ச மாட்டார்கள்.
- நல்ல தலைவர்கள் துணிவுமிக்கவர்களாக இருப்பர்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

மோசேயின் இறப்பிற்குப் பிறகு விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்து வழிநடத்தக் கடவுள் யோசுவாவை அழைத்தார். அதை இப்பொழுது வாசிக்கக் கேட்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

மாணவர்கள் வரிசையாக வந்து விவிலியத்தின் மீது கைகளைப் பக்தியுடன் வைத்து நெற்றியில் ஒற்றிக்கொள்ளல். இயேசுவே உந்தன் வார்த்தையால் என்ற பாடலை அப்போது பாடலாம்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

யோசுவா 1:1-9

**8. இறைவார்த்தை விளக்கம்**

- ஆண்டவரின் ஊழியர் மோசே இறந்தபின், நூனின் மகனும் மோசேயின் உதவியாளருமாகிய யோசுவாவை ஆண்டவர் அழைத்தார்.
- மோசேக்குப்பின் யோசுவா இஸ்ரயேலின் தலைவர் ஆனார்.
- மோசேக்கு வாக்குறுதி கொடுத்த கடவுளே யோசுவாவையும் அழைத்து, “உன் காலடிபடும் இடத்தையெல்லாம் உங்களுக்குக் கொடுப்பேன்” என்று வாக்குறுதி கொடுத்தார்.
- “மோசேயுடன் நான் இருந்தது போல உன்னோடும் இருப்பேன். எனவே, நீ வீறுகொள், துணிந்து நில், வாக்களித்த நாட்டை உரிமையாக்கிக் கொள்” என்று திடமும் உறுதியும் கொடுத்தார்.
- கடவுள் தாம் அழைக்கின்ற யாவரையும் வாக்குறுதி கொடுத்து உறுதிப்படுத்துவது வழக்கம். மோசேயிடம் கொடுத்த வாக்குறுதி போலவே யோசுவாவிடமும் வாக்குறுதி கொடுப்பதால் யோசுவாதான் மோசேக்குப்பின் தலைவர் என்பது உறுதியாகிறது.



- மக்கள் மோசேயை ஏற்று கொண்டதுபோல யோசுவாவையும் ஏற்று கொண்டு “நீர் கட்டளையிடுவதை எல்லாம் நாங்கள் செய்வோம், மோசேக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்ததுபோல உமக்கும் கீழ்ப்படிவோம். உம் கடவுளாகிய ஆண்டவர் மோசேயுடன் இருந்ததுபோல உம்மோடும் இருப்பாராக. உமக்குச் செவி கொடாதவன் கொல்லப்படுவானாக. வீறு கொண்டு துணிவுடன் நிற்பீராக” என்று யோசுவாவுக்குத் தைரியமூட்டினர்.

**9. உய்த்துணரச் செய்தல்**

- யோசுவா துணிச்சல்மிக்கத் தலைவராக இருந்தார்.
- யோசுவா மக்களைக் கானான் நாட்டிற்கு அழைத்துச் சென்றார்.
- யோசுவாவுக்கு மக்கள் கீழ்ப்படிந்தனர்.

## பாகம் – 2 கலை வழிப் பயிற்சி


**1. கண்டு பிடி**

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் ‘ஆ’ என்ற எழுத்து இடையில் செருகப்பட்டுள்ளது. அவற்றை எல்லாம் நீக்கி விட்டு இறை வார்த்தையினை மட்டும் எழுதுக.

“ஆஉஆன்ஆகாஆலஅணிஆயைஆஉஆன்ஆகாஆலிஆலிஆரு ஆந் ஆது ஆஅ ஆக ஆற் ஆறு. ஆஏ ஆனெ ஆனி ஆல் ஆநீ ஆநி ஆற் ஆகு ஆம் ஆஇ ஆட ஆம் ஆபு ஆனி ஆத ஆமா ஆன ஆது” ஆஎ ஆன் ஆறா ஆர். ஆயோ ஆசு ஆவா ஆவு ஆம் ஆஅ ஆப் ஆப ஆடி ஆயே ஆசெ ஆய் ஆதா ஆர்.

**விடை :** யோசுவா 5:15 “உன் காலணியை உன் காலிலிருந்து அகற்று. ஏனெனில் நீ நிற்கும் இடம் புனிதமானது” என்றார். யோசுவாசும் அப்படியே செய்தார்.”

**2. இப்படத்**



**3. வசனத்தைக் கண்டுபிடிக்கவும்**

1. வட்டத்தில் உள்ள எழுத்துகளில் வசனம் அடங்கியுள்ளது.
2. ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு எழுத்து உள்ளது.

**யோசுவா 3:1-9; 5:13-15**

1. நீ
2. உ ன்
3. மு க ம்
4. ஆ ட வ ர்
5. இ ஸ் ர யே ல்
6. க ட் ட ளை இ டு
7. ஆ ண் ட வ ர்
8. ம க் க ள்
9. யோ சு வா
10. நீ ர்

**விடை**

5:15 ஆ 1. நீ
5:15அ 2. உ ன்
5:14 3. மு க ம்
5:13 4. ஆ ட வ ர்
5:1 5. இ ஸ் ர யே ல்
3:8 6. க ட் ட ளை இ டு
3:5 7. ஆ ண் ட வ ர்
3:5 8. ம க் க ள்
3:1 9. யோ சு வா
5:13 10. நீ ர்



3. அந்த எழுத்துக்களை இணைத்து வாசித்துப் பார்.
4. எண் வரிசை 1 முதல் 10 வரை இடப்புறம் அமைந்துள்ளது. ✘
5. இடப்புறம் உள்ள எண் அருகில் விவிலிய வசனம் குறிப்பிடுக.

**3. சரியா... தவறா...** ✓

1. என் ஊழியன் யோசுவா இறந்து விட்டான். சரி / தவறு ✘
2. இந்தத் திருச்சட்ட நூலை உன் முன்னின்று அகற்றாதே. சரி / தவறு ✘
3. அச்சமயத்தில் யோசுவா யோர்தானில் இருந்தார். சரி / தவறு ✓
4. உன் காலணியை உன் காலிலிருந்து அகற்றாதே. சரி / தவறு ✓
5. நான் ஆண்டவரின் படைத்தலைவன் என்ற முறையில் வந்துள்ளேன். சரி / தவறு
6. நீ செல்லும் இடம் எல்லாம் நான் உன்னோடு இருப்பேன். சரி / தவறு ✘ ✓
7. யோசுவாவுக்கு நான் கூறியவாறே உன் காலடிபடும் இடத்தை எல்லாம் உங்களுக்கு கொடுப்பேன். சரி / தவறு ✓
8. நீ செல்லும் இடம் எல்லாம் நலம் பெறுவாய். சரி / தவறு

நான்காம் நாள்

9. உன் வாழ்நாள் முழுவதும் எந்த மனிதனும் உன்னை எதிர்த்து நிற்கமாட்டான். சரி / தவறு

# 4. சாமுவேலின் அழைப்பு

## பாகம் –1 பாடப் போதனா முறை

### இறைவார்த்தை

1 சாமுவேல் 3:1-19

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- சிறுவன் சாமுவேல் ஏலி என்ற குருவின் முன்னிலையில் ஆண்டவருக்குப் பணி செய்து வந்தார்.
- அப்போது கடவுள் அவரை அழைத்தார்.
- கடவுளின் குரலுக்குச் சாமுவேல் செவிகொடுத்தார்.

### மனநிலை

- சாமுவேலைப் போல இறைப்பிரசன்னத்தில் வாழ்வேன்.
- இறைவார்த்தையைத் தினமும் வாசித்துக் கடவுளின் குரலுக்குச் செவிகொடுப்பேன்.

**1. தொடக்கச் செபம்**

சிறுவன் சாமுவேலை அழைத்த இறைவா! என் சின்ன இதயத்தை உமக்குத் தருகிறேன். என்னில் வந்து தங்கும்; என்னோடு பேசும். உமது வார்த்தையை நான் கேட்பேன். ஆமென்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

இத்தாலியிலுள்ள லூயிஸ்குவனெல்லோ என்ற சிறுவன் தன் பெற்றோருடன் கோவிலுக்குச் சென்றான். வழியில் அவனுடைய மாமாவைக் கண்டான். அவர் சில இனிப்புக்கள் வாங்கிப் பொட்டலமாக சிறுவனிடம் தந்தார். அந்நேரத்தில் திருப்பலிக்கான மணி ஒலிக்கவே லூயிஸ் இனிப்புப் பொட்டலத்தை கோவிலுக்கு எடுத்துச்செல்ல விரும்பாமல் அருகில் இருந்த மறைவிடத்தில் வைக்க முயன்றான். திடீரென இரண்டு கைகள் நீட்டுவது போன்ற காட்சி தெரிந்தது. ஆனால் அருகில் யாருமில்லை. கண்களை உயர்த்திப் பார்த்தான். ஒரு முதியவர் அதை எனக்குக் கொடு என்று கேட்பது போல இருந்தது. இந்நிகழ்வு அவனுக்குப் பயத்தை உண்டாக்கியது. லூயிஸ் பொட்டலத்தை மறைவாக வைத்துவிட்டு வேகமாகச்



சென்று விட்டான். அதே நேரத்தில் அம்முதியவரும் மறைந்துவிட்டார். இதுவே பிற்காலத்தில் அவரது நற்செய்திப் பணிக்கு அடித்தளமிட்டது; அவரை சமூகத்தில் நலிவுற்ற மக்களுக்குத் தொண்டாற்றத் தூண்டியது.

**3. அடையாளத்தை அலசுதல்**

- லூயிஸ் ஏன் இனிப்புப் பொட்டலத்தை கோவிலுக்குள் எடுத்துச் செல்லத் தயங்கினான்?
- நீட்டப்பட்ட கைகளிலிருந்து லூயிசுக்கு என்ன விளங்கியது?
- உங்களைத் தொண்டாற்ற அழைப்பது எது?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

கோவில் என்பது பக்திக்குரிய இடம். அங்கே பக்தியுடன் நடந்து கொள்கிறவர்களுக்குக் கடவுள் தம் அன்பை வெளிப் படுத்துவார், தமது திட்டத்தை வெளிப்படுத்துவார்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

ஆண்டவர் திருமுன்னிலையில் வளர்ந்து வந்த சாமுவேலை, தம் மக்களைத் தலைமையேற்று வழிநடத்த ஆண்டவர் அழைத்த நிகழ்ச்சியை வாசிக்கக் கேட்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

ஆசிரியர் நடுவில் நின்று கொண்டு திருவிவிலியத்தை உயர்த்திப் பிடித்திருப்பார். பிள்ளைகள் தங்களது கரங்களை இணைத்துப் பிடித்துக் கொண்டு “வார்த்தையே வாரும் வார்த்தையே வாரும்; வாழ்வினை வழங்கும் வார்த்தையே வாரும்” என்று ஆசிரியர் பாடப் பின்தொடர்ந்து பாடுவர். இறுதியில் திருவிவிலியத்தை நோக்கிக் கரங்களை நீட்டித் தம் கண்களில் ஒற்றிக்கொள்வர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

1 சாமு 3:1-19

**8. இறைவார்த்தை விளக்கம்**

- அந்நாளில் இறைவார்த்தை அரிதாக இருந்தது; ஆண்டவரின் காட்சியும் அவ்வளவாக இல்லை.
- பெரிய குருவான ஏலியின் மக்கள் ஒப்னி, பினகாசு மிகவும் கீழ்த்தரமானவர்களாக இருந்தனர். ஆண்டவர்மீது அவர்கள் அக்கறை கொள்ளவில்லை. எனவே, ஆண்டவரின் திருமுன் இந்த இளைஞர்களின் பாவம் மிகப்பெரியதாக இருந்தது. ஆண்டவருக்குச் செலுத்தப்பட்ட படையல்களைக்கூடத்

துச்சமாகக் கருதினார்கள்.

❖ ஏலிக்குப் பின் ஆண்டவரின் பணியைத் தொடர்ந்து செய்ய தகுதியான ஒருவர் தேவைப்பட்ட நேரத்தில் கடவுள் சாமுவேலை அழைத்தார்.

❖ சாமுவேல் தம் தாயான அன்னாவின் பொருத்தனையால், கடவுளின் அருளால் எல்கானாவுக்கும் அன்னாவுக்கும் மகனாகப் பிறந்தார்.

❖ சாமுவேல் என்பதற்கு "நான் ஆண்டவரிடம் இருந்து கேட்டேன்" என்பது பொருள்.

❖ சாமுவேல் ஆண்டவரின் பேழை அருகே தூங்கிவிட்டார். மூன்று முறை கடவுள் அழைத்ததை அவர் அறியவில்லை. நான்காவது முறை பெரிய குரு ஏலி சொல்லித் தந்ததுபோல 'பேசும், உம் அடியான் கேட்கிறேன்' என்று பதில் கூறினார்.

❖ சாமுவேலைத் தேர்ந்தெடுப்பதைக் கடவுள் வெளிப் படுத்தினார்; சாமுவேல் தேர்ந்தெடுக்கப்பட்டதை ஏலியும் ஏற்றுக்கொண்டார்.

❖ சாமுவேலை ஆண்டவர் இறைவாக்கினராக நியமித்துவிட்டார் என்று அனைத்து இஸ்ரயேல் மக்களும் ஏற்றுக்கொண்டனர்.

❖ சீலோவில் ஆண்டவர் மீண்டும் தோன்றி, தம் வாக்குறுதிகளை வழங்கி உறுதிப்படுத்தினார்.

**9. உய்த்துணரச் செய்தல்**

✪ கடவுளின் அழைப்பு என்பது ஒரு கொடை.

✪ துறவறம், இல்லறம் இரண்டி ... ்ய

...ன்னத்தி ... ின்

பேன்.







## பாகம் – 2 கலை வழிப் பயிற்சி

**1. பழமொழிகள்**

| நாட்டு பழமொழிகள் | விவிலிய பழமொழிகள் |
|---|---|
| 1. முருங்கையை முறுச்சி வளர்க்கணும் புள்ளைய அடிச்சி வளர்க்கணும் | 1. பிள்ளாய் ஆண்டவர் உன்னைக் கண்டித்து திருத்துவதை வேண்டாமென்று தள்ளிவிடாதே (நீமொ 3:11) |
| 2. என்னாதான் இருந்தாலும் ஒற்றக்கை தான் ஒட்டும் | 2. உன் சொந்த நீர்த்தொட்டியிலுள்ள நீரையே குடி (நீமொ 5:15) |
| 3. வேலியில் பேறாத மடியில் போடுற | 3. பிள்ளாய்! உன் அடுத்திருப்பவரின் கடனுக்காக நீ பொறுப்பேற்காதே (நீமொ 6:1) |
| 4. தந்தை சொல்மிக்க மந்திரமில்லை | 4. "நான் சொல்வதை நினைவில் வை (நீமொ 4:4) |
| 5. நடக்கப் பயந்து சித்தப்பன் வீட்டில் பெண் எடுத்தானாம் | 5. சோம்பேறிகளே எவ்வளவு நேரம் படுத்திருப்பீர்கள் (நீமொ 6:9) |
| 6. செத்தவங்கையில வெத்தலை | 6. சோம்பேறிகளே எறும்பைப் பாருங்கள் (நீமொ 6:6) |
| 7. அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் | 7. பிள்ளாய் உன் தந்தையின் கட்டளையை கடைப்பிடி. தாயின் அறிவுரையைப் புறக்கணியாதே (நீமொ 6:20) |
| 8. பேராசை பெரு நஷ்டம் | 8. பேராசை படைத்த கண் தீயது என நினைத்துக் கொள் (நீமொ 31:13) |

**2. வார்த்தை விளையாட்டு**

அனைவரும் கலந்து கொள்ளுதல். பெயரை ஆசிரியர் சொல்ல பெயரில் எத்தனை எழுத்துகள் வருகின்றனவோ? அத்தனை நபர்களாக ஒன்று சேர்த்தல்.

எடுத்துக்காட்டு: சாமுவேல் என்று சொன்னவுடன் எழுத்தை எண்ணிப் பார்த்து 4, 4 நபர்களாக ஒன்றுகூடுதல்.

1) ஆண்டவரே 2) அடியான் 3) ஏலி 4) மறுமொழி
5) அடியேன் 6) கண்பார்வை 7) கேட்கிறேன் 8) அழைத்தார்
9) பேசும் 10) வார்த்தை 11) காதுகள்

**(இந்த வார்த்தைகளை மாற்றி மாற்றிச் சொல்லுதல்)**

### 3. செயல்பாடு

பன்னிரு மாணவர்கள் 6, 6 பேராக இரு குழுக்களாக பிரித்தல். 5 அடி இடைவெளி விட்டு ஒருவரை ஒருவர் பார்த்து நிற்க செய்தல். தமக்கு எதிரே நிற்பவர்கள் கீழ்க்கண்ட வார்த்தைகளைச் சொல்லும் போது இதில் குறிப்பிட்டுள்ளபடி செயல்பட வைத்தல்.

| சொல் | செயல் |
|---|---|
| தூக்கம் | தூங்கும் பாவனை |
| பேசும் | வாயில் கைவைத்து |
| அடியேன் | மண்டியிடல் |
| சாமுவேல் | எழுந்து நிற்றல் |
| காதுகள் | காதைக் காட்டுதல் |
| இல்லக்கதவு | கை சேர்த்து காட்டுதல் |
| ஏலி | இடது கை நெஞ்சில் |
| | வலது கை ஆசிர்வதித்தல் போல் |

### 4. நகைச்சுவை

ஏலி : சாம் சாம் எந்திரிப்பா உன்னுடைய குரு வந்திருக்கேன்.
சாமு : யோ - அறிவில்லையா தூங்கும்போது குருகுருன்னு போய்யா

2.

சாமு : குருவே நீங்க ஏன் பூனைக்கு பயப்படுகிறீர்கள் என்று சொல்லுங்க பார்ப்போம்.
ஏலி : தெரியவில்லை சொல்லு
சாமு : உங்க பேருலதான் ஏலி இருக்குதே

3.

சாமு : (தூங்குதல்)
கடவுள் : சாமுவேல், சாமுவேல்
சாமு : யோவ், குருவே இப்பத்தான் நல்லாத்தூங்குறேன் வயசான காலத்திலே தூக்கம் வரலேன்னா சும்மா கிடப்பா

4.

ஏலி : டேய் கடவுள் உன்ன கூப்பிட்டா 'இதோ அடியேன் இருக்கிறேன்' என்று சொல்லு
சாமு : எத்தனை படி குருவே

5.

ஏலி ... நா உன் அடியேன் என்று சொல்.
கடவுள் : சாமு ... சாமு



**ஐந்தாம் நாள்**

சாமு : குருவே கடவுள் உங்கள கூப்பிடுறாறு...

## 5. எசாயாவின் அழைப்பு

### பாகம் -1 பாடப் போதனா முறை

### இறைவார்த்தை

எசாயா 6:1-8

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- கடவுளின் தன்மைகளில் அவர் தூயவர் என்பதே முதன்மையானதும் முக்கியமானதும் ஆகும்.
- பாவிகளான மனிதர்களைத் தமது ஆவியால் புனிதப்படுத்தித் தம் பணிக்காக கடவுள் அழைக்கிறார்.
- எசாயாவை நெருப்புப் பொறிகளால் தூய்மைப்படுத்திக் கடவுள் அழைத்தார்.

### மனநிலை

- நான் தூய்மையுடன் வாழ்வேன்.
- இறைவார்த்தையாலும், செபத்தாலும், ஒப்புரவு அருள்சாதனத்தாலும் என்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வேன்.
- இறைவன் என்னைத் தம் பணிக்காக அழைக்க வேண்டுமென்று ஆர்வமுடனும் தூய உள்ளத்துடனும் காத்திருப்பேன்.

#### 1. தொடக்கச் செபம்

தூயவரான இறைவா! இறைவாக்கினர் எசாயாவைத் தூய்மைப் படுத்தியது போல என்னையும் தூய்மைப்படுத்தும். அழைக்கும் உம் குரலுக்கு எசாயாவைப் போல நானும் பதில் சொல்ல அருள்தாரும்.

#### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

ஓய்வுபெற்ற ஒரு பேராசிரியர் பேருந்தில் பயணம் செய்து கொண்டு இருந்தார். கூட்ட நெரிசலில் நிற்க முடியாமல் அழுக்கடைந்த உடையுடன் வயதான பாட்டி ஒருவர் நின்று கொண்டிருந்தார். இப்பரிதாப நிலையைக் கண்ட பேராசிரியர் தன்னோடு வந்த தனது பேரனைத் தன் மடியில் அமர்த்திவிட்டு பாட்டியை அமரச் சொன்னார். டிப்டாப்பாக இருந்த பேராசிரியரின் அருகே அமருவதற்குப் பாட்டி தயக்கம் காட்டினார். ஆனால் இவரோ "நீங்கள் உட்காராவிட்டால் கீழே விழுந்துவிடுவீர்கள். எனவே உட்காருங்கள்" என்று சொல்லவே பாட்டியும் தயக்கத்தோடு அமர்ந்தார். பாட்டியிடம் பேசிக் கொண்டே இருந்த அவர் தன் வீட்டில் சமையலுக்கு ஆள்தேவை என்பதைக் கூறினார். ஆதரவற்ற பாட்டியும் உடனே வருகிறேன் என்று கூறி அவரோடு

வீட்டிற்குச் சென்று சமையல் பணி செய்து கொடுத்தார். பேராசிரியர் புதிய ஆடைகள் கொடுத்து அவரைத் தம் குடும்பத்தோடு சேர்த்துக் கொண்டார்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- ✶ பாட்டியின் தயக்கத்திற்குக் காரணம் என்ன?
- ✶ பேராசிரியர் பாட்டியின் தயக்கத்தை எப்படிப் போக்கினார்?
- ✶ இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏதேனும் நீங்கள் கேட்டதுண்டா?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

வாழ்க்கையில் சரியான முடிவுகளைச் சரியான நேரத்தில் எடுக்க வேண்டும்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

எசாயா என்ற இறைவாக்கினரைக் கடவுள் தம் பணிக்காக அழைத்தார். எசாயாவின் காலத்தில் வாழ்ந்த இஸ்ரயேல் மக்கள் ஒழுக்கக் கேட்டில் வாழ்ந்தனர். கடவுளின் அழைப்பிற்கு எசாயாவின் பதில் என்ன என்பதை இப்பகுதியில் காண்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

மாணவர் பிரதிநிதிகள் ஐவர் அரியணை ஏற்றப்பட்டுள்ள திருவிவிலியத்தின் அருகில் வருவர். “உலகின் ஒளியான வார்த்தையே போற்றி!” என்று கூறி சில மலர்களை விவிலியத்தின் மீது ஒருவர் தூவிப் பணிந்து செல்வார். மற்ற நால்வரும் இதுபோன்று வேறு வார்த்தைகளைக் கூறி மலர்தூவிச் செல்வர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

எசாயா 56:1-8

**8. இறைவார்த்தை விளக்கம்**

- ❖ எசாயா என்றால் ‘யாவேயின் மீட்பு’ என்று பொருள்.
- ❖ எசாயா கி.மு. 765இல் எருசலேமில் செல்வாக்கு மிக்க ஓர் உயர் குடியில் பிறந்தார். தந்தை பெயர் ஆமோஸ் (இறைவாக்கினர் ஆமோஸ் அல்ல). இவர் 40 ஆண்டுகள் நான்கு அரசர்களின் காலத்தில் இறைவாக்குப் பணி செய்தார். கொடுங்கோல் மன்னன் மனாசே காலத்தில் (கி.மு. 687 - 642) மரப்பொந்தில் வைத்து ரம்பத்தால் அறுக்கப்பட்டு மறைச்சாட்சியாக இறந்தார்.
- ❖ எசாயா வாழ்ந்த காலத்தில் இஸ்ரயேல் மக்கள் ஒழுக்கக்கேட்டில் திளைத்தனர். பணக்காரர்கள் ஏழைகளை ஏமாற்றிப் பொருள் சேர்த்தனர். ஏழைகளும் கைம்பெண்களும் வஞ்சிக்கப்பட்டனர். பெண்கள் செல்வ மயக்கத்தில் அலைந்தனர். மக்கள் குடிவெறிக் களியாட்டங்களில் மிதந்தனர். சிலைவழிபாடு, விபசாரம், நரபலி போன்ற அருவருக்கத்தக்கச் செயல்களால் யாவேக் கடவுளின் வழிபாடு மாசுபடுத்தப்பட்டது.
- ❖ இறைவாக்கினரான எசாயா ஆண்டவரை அரியணையில் வீற்றிருக்கும் அரசரைப்போல் கண்டார். தொங்கல் ஆடை அரசரின் அதிகாரத்தைக் குறிக்கிறது. செராபீன்கள் “பற்றி எறிதல்” அல்லது “இறை பிரசன்னத்தை”க் குறிக்கும்.
- ❖ மூன்று முறை தூயவர் என்று கூறுவது முழுமையாகத் தூயவர் என்று பொருள்படும்.
- ❖ இறைவனின் புனிதத்தன்மையைக் கண்டவுடன் எசாயா, தனது குற்றங்களை உணர்ந்தார்.
- ❖ அக்காலச் சூழல்படி, கடவுளைக் கண்ணால் காணக்கூடாது. ஆகவேதான் எசாயா, ஐயோ நான் அழிந்தேன் என்று கதறினார்.
- ❖ அழைத்தலுக்கு மறுப்பேதும் சொல்லாமல் நான் இருக்கிறேன் என்றார் இறைவாக்கினர் எசாயா. ஏனெனில் அவர் மக்களின் ஒழுக்கச் சீர்கேட்டைக் கண்டு கொதித்துப் போய் இருந்தார். எனவே மனந்திரும்பி வருமாறு எசாயா மக்களை அழைத்தார்.

**9. உய்த்துணரச் செய்தல்**

- ★ இறைவன் தூயவர்; நானும் தூய்மையாக வாழ முயற்சி செய்வேன். அடிக்கடி ஆன்ம சோதனை செய்து எனது உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருப்பேன்.


## பாகம் – 2 கலை வழிப் பயிற்சி

**1. இடது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளைக் கொண்டு வலப்பக்கத்தில் உள்ள வார்த்தைகளைப் பொருத்துக.**

| அ | ஆ |
|---|---|
| 1. ஆறு | உதடுகள் |
| 2. தூய்மையற்ற | ஆடை |
| 3. நெருப்புப் | ஆண்டவர் |
| 4. குற்றப் | பொறி |
| 5. படைகளின் | இறக்கைகள் |
| 6. வாயில் | பீன்கள் |
| 7. குரல் | பழி |
| 8. சேரா | ஒலி |
| 9. தொங்கல் | நிலை |

**விடை**

| | |
|---|---|
| 1. ஆறு | இறக்கைகள் |
| 2. தூய்மையற்ற | உதடுகள் |
| 3. நெருப்பு | பொறி |
| 4. குற்றப் | பழி |
| 5. படைகளின் | ஆண்டவர் |
| 6. வாயில் | நிலை |
| 7. குரல் | ஒலி |
| 8. சேரா | பீன்கள் |
| 9. தொங்கல் | ஆடை |




**2. சேராபீன் தூதர் எசாயாவை அடைய வழிகாட்டுங்கள்.**

### 3. விளையாட்டு (செயல் விளையாட்டு)

**நடத்துனர் :** சேராபீன் என்று கூறுவார். மாணவர்கள் கைகளை சிறகடித்துப் பறப்பது போல் காட்டுவர்.

**நடத்துனர் :** ஆறு இறக்கை என்று கூற மாணவர்கள் ஆறு விரல்களைக் காட்டுதல்.

**நடத்துனர் :** கோவில் என்று கூற மாணவர்கள் கைகளை கோபுரம் போல் காட்டுவர்.


**நடத்துனர் :** குறடு என்று கூற மாணவர்கள் கைவிரல்களை இடுக்கிப்

ந ... ன்று கத்துவர்.


இ ... கூறுவார். சரியாக

ெ ...

**4** ... **தைகளுக்குப்**




1) படை 6:3
2) வாய் 6:7
3) பணி 6:8
4) பலி 6:6
5) தூய்மை 6:5
6) கோவில் 6:4
7) உசியா 6:1
8) குரல் ஒலி 6:4
9) உதடு 6:5
10) சேராபீன்கள் 6:2








## 6. எரேமியாவின் அழைப்பு

### *பாகம் –1 பாடப் போதனா முறை*

### இறைவார்த்தை

எரேமியா 1:1-12

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- எரேமியாவின் அழைப்பு ஒரு சிறந்த அழைப்பு. அழைப்பின் போதே வர இருக்கும் துன்பமும் முன் அறிவிக்கப்பட்டது.
- எரேமியா மணம் முடித்துக் கொள்ளாமல் கடவுளை மட்டுமே நம்பி வாழ்ந்தார்.
- அநீதி, சிலைவழிபாடு, சமூகச் சீர்கேடுகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவும், போராடவும் எரேமியா அழைக்கப்பட்டார்.

### மனநிலை

- எரேமியாவை அழைத்ததைப் போல, என்னையும் கடவுள் அழைப்பதைக் கண்டுணர்வேன்.
- சமூகத்தில் காணப்படும் தீமைகளைக் களைய முற்படுவேன்.
- சமூகத்தில் நடைபெறும் நல்ல செயல்களை வரவேற்பேன்.

### 1. தொடக்கச் செபம்

அன்பான இறைவா! எங்கள் சமூகத்திலும், நாட்டிலும் சாதி, இன, மதவெறி ஆகியவற்றால் ஏற்படும் வன்முறைகள், ஒழுக்கச் சீர்கேடுகள் யாவற்றையும் நீக்கி, அமைதிகாண முயல்வோருடன் நீரே தங்கியிருந்து வழிநடத்தும். ஆமென்

### 2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்

கரிசல் என்றொரு கிராமம். அங்கிருந்து ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவி கவிதாவுக்கு ஒருநாள் வெட்டு மாதிரியான ஒரு நோய் வந்தது. (காக்காய் வலிப்பு). கவிதாவின் குடும்பத்தார் மகளுக்குச் சாமி வந்து விட்டது என்று மாலை மரியாதை செய்தனர். கையில் கற்பூரம் ஏற்றிவிட்டனர். சிறிது நேரத்தில் வெட்டு நின்றது. வீட்டிற்குச் சென்ற சிறிது நேரத்தில் மீண்டும் வந்தது. இப்போது மகளுக்குப் பேய் பிடித்து விட்டது என்று மிகவும் கொடூரமாக

துடைப்பக் கட்டையால் அடித்து உதைத்தனர்.

இதைக் கேள்விப்பட்டு ஆசிரியர் கல்லரசு விரைவாக வீட்டிற்குச் சென்றார். மாணவி கவிதாவைப் பார்த்துவிட்டு, பெற்றோரிடம், "உடனே மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுங்கள்" என்றார். பெற்றோர், "இது பிசாசு பிடித்திருக்கிறது. டாக்டர் என்ன செய்வார்"? என்று கூறிவிட்டனர். மறுநாள் பள்ளிக்கு வந்த மாணவி காலை வழிபாட்டின்போதே கீழே விழுந்து துடித்தாள். ஆசிரியர் கல்லரசு மருத்துவமனைக்குச் சிறுமியைத் தூக்கிச் சென்றார், மருத்துவர் பரிசோதித்துவிட்டு, இந்நோய் நரம்புத் தளர்ச்சியால் வருகிறது என்று கூறி சிகிச்சை அளித்தார். மாணவி கவிதாவும் சிறிது நாளில் நலமுடன் வீடு திரும்பினாள். ஆசிரியரைப் பெற்றோர் பாராட்டினார்கள். தங்களது தவறை உணர்ந்தார்கள்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- கவிதாவின் பெற்றோர் என்ன மனநிலையில் இருந்தனர்?
- ஆசிரியர் கல்லரசு கவிதாவைக் காப்பாற்ற என்ன செய்தார்?
- பிறரது தவற்றைத் திருத்த நீங்கள் ஏதேனும் செய்திருக்கிறீர்களா?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

சமூகத்தில் சில நல்ல செயல்களைச் செய்யும்போதோ, நல்லனவற்றைச் சொல்லும்போதோ எதிர்ப்புகள் வருவது வழக்கம். ஆனால் நாம் தளர்ந்து போகாமல் நல்லனவற்றையே சொல்லவும் செய்யவும் வேண்டும்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

எரேமியா வாழ்ந்த காலத்தில் அரசியல் குழப்பம் ஏற்பட்டிருந்தது. அசீரியப் பேரரசின் கை ஓங்கியிருந்தது. யூத அரசர்கள் அசீரியருக்குக் கப்பம் கட்டி வந்தார்கள். சிலை வழிபாடும், ஒழுக்கச் சீர்கேடுகளும் தலைவிரித்தாடின. இதிலிருந்து தம் மக்களை மீட்கக் கடவுள் எரேமியாவை அழைத்தார். அதைப்பற்றி இங்கு காண்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

வகுப்புத் தலைவர் திருவிவிலியத்தை மேசைமீது விரித்து வைக்க முன் குறிக்கப்பட்ட மாணவர்கள் சிலர் மேசையைச் சுற்றி நின்று கொண்டு "ஆயன் மந்தையைக் காப்பது போல ஆண்டவர் வார்த்தை நம்மைக் காக்கின்றன" எனப்பாடுவர். பிறகு எல்லாரும் "ஆண்டவரே உமது மந்தையின் ஆடுகளான நாங்கள் உமது குரலுக்குச் செவி சாய்க்கிறோம்" என்று சொல்வர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

எரேமியா 1:1-12

**8. இறைவார்த்தை விளக்கம்**



- எரேமியா என்ற சொல்லுக்கு "யாவே நிறுவுகிறார்" அல்லது "யாவே நிலைநிறுத்தினார்" என்று பொருள்.
- எரேமியா எருசலேமுக்கு வடக்கே 3 மைல் தூரத்தில் உள்ள அநாத்தோத் என்ற ஊரில் வாழ்ந்தார். அவர் கி.மு. 650இல் பிறந்தார். கி.மு. 627இல் ஆண்டவரின் அழைப்பு பெற்றார்.
- எரேமியா பக்திமிக்கச் சூழலில் வளர்ந்து வந்தார். கி.மு. 580 வரை எருசலேமிலும் எகிப்திலும் இறைவாக்குப் பணி புரிந்தார். இஸ்ரயேல் இனத்தின் வேதனையெல்லாம் அனுபவிக்கும் துன்ப மனிதராக வாழ்ந்தார். பணிக்காக மணவாழ்வைக் கூட ஏற்றுக் கொள்ளவில்லை.
- பாபிலோனுக்குக் கப்பம் கட்டுவதா? அல்லது எகிப்தோடு இணைந்து பாபிலோனை எதிர்ப்பதா? முடிவெடுக்க முடியாமல் யூதாவின் தலைவர்கள் திணறினார்கள். இறுதியில் பாபிலோனை எதிர்த்தனர். பாபிலோனியர் கி.மு. 586இல் யூதா நாட்டையே அழித்தனர், பாபிலோனுக்கு மக்களை நாடு கடத்தினார்கள்.
- மெசபத்தோமியாவில் இசிதார் என்ற தெய்வ வழிபாடும், மத அடிப்படையில் தேவதாசி முறையில் விபச்சாரமும் பெருகியது. இதனை அரசர் யோசியா அழித்து, மறுமலர்ச்சி செய்து உடன்படிக்கையைப் புதுப்பித்தார்.
- எரேமியாவும் இவ்வுடன்படிக்கையையே வலியுறுத்துகிறார். "இறைவனுக்கு அன்பு இல்லையெனில் கடவுள் தண்டிப்பார்" என்றார்.
- மக்களின் ஒழுக்கம் எரேமியாவின் காலத்தில் சீர் குலைந்திருந்தது. நீதி நிலை குலைந்து போயிற்று (காண்க. 51ஆம் அதிகாரம்) விபசாரமும், எளியோரையும் அநாதை களையும் நசுக்கி வதைப்பதும், செல்வந்தரின் அன்றாட நடைமுறையாயிற்று, இத்தகையச் சூழலில்தான் எரேமியாவுக்கு அழைப்பு வந்தது!
- யூதச் சட்டப்பட்டி 40ஆம் வயதில்தான் சபைமுன் இறை வார்த்தையைப் படிக்கவும், அதைப்பற்றிச் சொல்லவும் முடியும். எரேமியா தனது 23ஆம் வயதில் அழைப்பைப் பெற்றதால், "நான் சிறுபிள்ளை" என்றார்.
- கடவுள் அழைக்கும்போது மனிதர் கூறும் சாக்குப்போக்குகளைக் கடவுள் கண்டு கொள்வதில்லை. "பிடுங்க, தகர்க்க, அழிக்க கவிழ்க்க, கட்ட, நட பொறுப்பாளியாக்கினேன்" என்கிறார் ஆண்டவர்.
- எருசலேமின் வீழ்ச்சிக்குப் பிறகு (கி.மு. 586) மக்கள் சிலர் எகிப்திற்கு ஓடிச் சென்றனர். அப்போது எரேமியாவையும் அழைத்துச் சென்றனர். எகிப்தில் எரேமியாவின் இனத்தவர்களே அவரைக் கல்லால் எறிந்து கொன்றனர்.

**9. உய்த்துணரச் செய்தல்**

- தீமையைப் பிடுங்கித் தகர்க்கவும், நன்மையைக் கட்டவும்

நடவும் எரேமியாவைக் கடவுள் அழைத்தார்.

- தாயின் வயிற்றில் உருவாகு
அறிந்திருக்கிறார்.

- ... கொள்வேன்.

**பாகம் – 2 கலை வ**

## 1. மனப்பாடம் செய்க

‘என் தலைவராகிய ஆண்டவரே, நான்
எனக்குப் பேசத் தெரியாதே,
சிறுபிள்ளைதானே’ என்றேன்.
ஆண்டவர் என்னிடம் கூறியது:

“ ‘சிறுபிள்ளை நான்’
என்று சொல்லாதே;
யாரிடமெல்லாம் உன்னை
அனுப்புகின்றேனோ
அவர்களிடம் செல்” (எரே 16-7)



## 2. வினாடி - வினா

1. இல்க்கியாவின் மகன் பெயர் யாது?
2. எரேமியா காலத்தில் ஆண்ட அரசர் யார்?
3. யோசியா காலத்தில் எந்த ஆண்டில் எரேமியாவிற்கு ஆண்டவர் வாக்கு அருளப்பட்டது?
4. “தாய் வயிற்றில் உருவாக்குமுன்பே அறிந்திருந்தேன்” யார் யாருக்குக் கூறியது?
5. மக்களின் இறைவாக்கினர் யார்?
6. எரேமியாவிற்கு ஆண்டவர் செயல் என்ன?
7. “மக்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பு” என்று கூறியது யார்? யாரை?
8. “அஞ்சாதே! உன்னோடு இருக்கின்றேன்” என்று கூறியது யார்?
9. “பிறக்கு முன்னே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்” என்று யார் யாருக்குக் கூறியது?
10. “என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன்” யார் யாருக்குக் கூறியது.

**விடை**



1) எரேமியா 2) யோசியா 3) 13-ஆம் ஆண்டில் 4) ஆண்டவர் எரேமியாவுக்கு 5) எரேமியா 6) கையை நீட்டி வாயைத் தொட்டது 7) ஆண்டவர் எரேமியாவை 8) ஆண்டவர் 9) ஆண்டவர் எரேமியாவை 10) ஆண்டவர் எரேமியாவுக்கு.

## 3. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | பென்ய | சலேம் |
| 2. | எரே | செல் |
| 3. | ஆண்டவர் வாக்கு | நான் |
| 4. | செதே | யிருப்பேன் |
| 5. | எனக்கு | இருக்கிறேன் |

**விடை**

1. பென்யமின்
2. எரேமியா
3. ஆண்டவர் வாக்கு அருளப்பட்டது
4. செதேக்கியா
5. எனக்கு பேசத் தெரியாது
6. நான் உன்னோடு இருக்கிறேன்
7. விழிப்பாயிருப்பேன்
8. சிறுப்பிள்ளை நான்
9. அவர்களிடம் செல்
10. எருசலேம்

6. நான் உன்னோடு பேசத் தெரியாது
7. விழிப்பா அருளப்பட்டது
8. சிறுப்பிள்ளை க்கியா
9. அவர்களிடம் மியா
10. எரு மின்

# 7. அன்னை மரியாவின் அழைப்பு

## பாகம் –1 பாடப் போதனா முறை

### இறைவார்த்தை

லூக்கா 1:26-38

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- மரியா பெண்களுக்குள் ஆசி பெற்றவர்.
- ஆண்டவருக்கு அடிமையாகத் தன்னையே ஒப்புக்கொடுத்தார்.

### மனநிலை

- அன்னை மரியாவை என் கிறிஸ்துவ வாழ்வுக்கு மாதிரியாகக் கொண்டு வாழ்வேன்.
- இறைவார்த்தையை வாழ்வாக்கி உள்ளத்தில் இருத்திச் சிந்திப்பேன். இயேசுவை என் செயல்களில் வெளிப் படுத்துவேன்.

**1. தொடக்கச் செபம்**

அன்பே உருவான இறைவா! உம்மால் இயலாதது ஒன்றுமில்லை என்று நாங்கள் நம்புகிறோம். அன்னை மரியா உம் வார்த்தைக்கு முதலிடம் தந்து வாழ்ந்ததைக் கற்றுக்கொள்ள அருள்தாரும். ஆமென்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

சிறுவன் சாம் தொலைக்காட்சிப் பெட்டியில் வரும் போகோ (Pogo) என்ற சிறுவர் நிகழ்ச்சியை மிகுந்த ஆர்வமுடன் பார்ப்பது வழக்கம். ஒருநாள் மாலையில் பள்ளி விட்டு வந்து வழக்கம் போல் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். அன்று வழக்கத்தைவிட மிகுந்த உற்சாகத்துடன் அந்தத் தொடர் அமைந்திருந்தது. சாம் தன்னை மறந்த நிலையில் தொடரைப் பார்த்து சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தான். அவ்வேளையில் அவனுடைய தாய், கடைக்குச் செல்வதற்காக 'சாம்' என்று அழைத்தார்கள். சாம் உடனடியாக தொலைக்காட்சி நிகழ்ச்சியை விட்டு எழுந்து சென்று தன் தாய்க்கு உதவி செய்தான்.



**3. அடையாளத்தை அலசுதல்**

- தொலைக்காட்சியில் சாம் விரும்பிப் பார்த்த நிகழ்ச்சி எது?
- உன்னை உன் தாய் அழைத்திருந்தால் நீ என்ன மறுமொழி கொடுத்திருப்பாய்?
- 'சாம்' அவனது தாய்க்கு உதவி செய்தது ஏன்?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

தான் மிகவும் விரும்பும் ஒன்றை விட்டுக்கொடுப்பது என்பது இயல்பாக எல்லாருக்கும் கடினமானதாகவே இருக்கும். கீழ்ப்படிதல் இருந்தால் மட்டுமே விட்டுக்கொடுக்கும் பண்பு வளரும்.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

அன்னை மரியா மணவாழ்விற்கு ஒப்பந்தம் ஆகியிருந்த போதும் கூட கடவுளின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தாள்கள்; கடவுளின் வார்த்தைக்கு முதலிடம் தந்தார்கள். இதை இப்பகுதியில் காண்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

திருவிவிலியத்தை நடுவில் அரியணையேற்றி வைத்து ஒளி - தூபம் - மலர்களை ஒரே தட்டில் வைத்து - இறைவார்த்தை அஞ்சலிக்கான தெரிந்த பாடலைப்பாடி ஒருவர் அஞ்சலி செய்தல். எல்லாரும் எழுந்து நின்று "கனிவான கட்டளைகளைத் தருகின்ற கடவுளின் வார்த்தைகளைத் தலைவணங்கி ஏற்றுக்கொள்கிறோம்" என்று ஆசிரியர் சொல்ல மாணவர்கள் பின்தொடர்ந்து சொல்வர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

லூக் 1:26-38

**8. இறைவார்த்தை விளக்கம்**

- எலிசபெத்து கருவுற்றிருந்த ஆறாம் மாதம், கபிரியேல் தூதர் மகிழ்ச்சியூட்டும் ஒரு நற்செய்தியைக் கொண்டு வந்தார். மிகக்குறைந்த குடும்பங்களே வாழ்ந்து வந்த நாசரேத்து என்ற ஊரில் வாழ்ந்த மரியா என்ற கன்னிக்கு அந்த நற்செய்தி வந்தது.
- கன்னி என்றால் திருமண வயதுடைய இளமங்கை என்று பொருள்படும்.
- யோசேப்பு என்றால் 'யாவே கூட்டிச் சேர்க்கிறார்' எனப் பொருள்படும். வீரமாமுனிவர் 'வளன்' என்று பொருள் கொள்வார்.
- யோசேப்புக்கும் மரியாவுக்கும் மணஒப்பந்தம் செய்யப் பட்டிருந்தது. சட்டப்படி ஒப்பந்தம் செய்வோர் கட்டுப்பாட்டிற்கு உள்ளாவர். விவாகரத்தினால்தான் இதனை முறிக்க முடியும். ஒப்பந்தம் செய்த ஓராண்டுக்குப் பிறகு மணமகன்

மணமகளைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் செல்வார். பின் இருவரும் கணவன் மனைவியாக வாழ்வர். மணமகன் மணமகளைத் தனது இல்லத்திற்கு அழைத்துச் செல்லல் யோசேப்பு மரியா வாழ்வில் இன்னும் நிகழவில்லை.

- மரியா என்பதற்கு 'யாவே'யினால் 'அன்பு செய்யப்பட்டவர்,' 'உயர்த்தப்பட்டவர்' என்பது பொருள். மரியாவின் வீட்டிற்கு வந்து கபிரியேல் தூதர் 'வாழ்க' என்று வாழ்த்துகிறார். இச் சொல்லுக்கு 'அகமகிழ்வாயாக' என்பது பொருள். அதாவது மெசியாவின் காலம் வருவது கண்டு 'அகமகிழ்க' என்று பொருள் கொள்ள வேண்டும். 'அருள் மிகப் பெற்றவரே' என்பதற்குச் சலுகை மிகப் பெற்றவரே என்று பொருள்.
- தம்மைத் தாழ்த்துகிறவர்களைக் கடவுள் எப்போதுமே உயர்த்துகிறார். அப்படியே கடவுள் மரியாவின் தாழ்மையைக் கண்ணோக்கி அவரை உயர்த்தத் திருவுளம் கொண்டார்.
- கடவுளின் வார்த்தையை மட்டுமே மரியா, முழுமையாக நம்பினார். புதிய ஏவாவாக, "இதோ ஆண்டவருடைய அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று கூறி உலகை மீட்கும் உன்னதர் தம் வயிற்றில் உருவாகத் தன்னையே அர்ப்பணித்தார்.

### 9. உய்த்துணரச் செய்தல்

- கடவுளுக்கு முதலிடம் கொடுத்ததால், மரியா உயர்ந்து நிற்பது போல நீயும் உயர்ந்து நிற்கலாம்!
- கடவுள் முன் எப்போதும் நம்மையே நாம் தாழ்த்த வேண்டும்.

## பாகம் – 2 கலை வழிப் பயிற்சி

### 1. விடுகதை

1. திருமணம் ஆகாமலே கருவாகியவர் யார்? **மரியா**
2. குழந்தைப் பேறுபெற்ற மலட்டு மூதாட்டி யார்? **எலிசபெத்து**
3. தாவீது குலத்தில் உதித்த வைர மணி யார்? **இயேசு**
4. [illegible] 'க' என்ற எழுத்தில் தொடங்குபவர், கன்னியிடம் வந்தவர் கருவுறும் செய்தி சொன்னவர் அவர் யார்? **கபிரியேல் தூதர்**
5. பெண்கள் குல மாணிக்கம் யார்? **அன்னை மரியா**
6. வெண்பனி போன்ற நிலை, தூய வெண்ணாடைத் தோற்றம் கொண்டவர் யார்? **கபிரியேல் தூதர்**

### 3. பாடப்பகுதியின் வார்த்தைகளுக்கு வண்ணமிடவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| [illegible] | இ | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| X | [illegible] | ரே | வா | ன | தூ |
| செ | [illegible] | த் | த் | து | த |
| லி | யா | க் | கோ | ப் | ர் |
| எ | இ | யே | சு | பு | X |
| க | ரு | வு | ற் | று | X |

1) இறைமகன்
2) நாசரேத்து
3) எலிசபெத்
4) [illegible]
5) கருவுற்று
6) வானதூதர்
7) இயேசு



4. [illegible] ரே வாழ்க (லூக் 1:26-36) இப்பகுதியை [illegible] யின் குணங்களை எழுதுக.



**அன்னை மரியாவின் அருங்குணங்கள்**

1. கலக்கம்
2. பயம்
3. தூய்மை
4. பிறரன்பு
5. இறை அருள்
6. கனிவு
7. உதவி புரிதல்
8. இரக்கம்
9. [illegible]
10. [illegible]
11. [illegible]
12. [illegible]சாந்தம்
13. பொறுமை
14. அன்பு
15. தயை
16. அமைதி
17. ஏற்புடைமை

## 8. முதல் நான்கு சீடர்களது அழைப்பு

### பாகம் –1 பாடப் போதனா முறை

### இறைவார்த்தை

யோவான் 1:35-51

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- இயேசு தாம் ஆற்றும் இறையாட்சிப் பணியைத் தொடர்ந்து செய்வதற்காகச் சீடர்களை அழைத்தார்.
- தம்மோடு இருக்கவும் நற்செய்தியை அறிவிக்கவும், தீமைகளை வெல்லவும் சீடர்களை அழைத்தார்.
- திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவரும் கிறிஸ்துவின் சீடராக அழைக்கப்படுகின்றார்.

### மனநிலை

- எவ்விதத் தகுதியும் இல்லாத என்னையும் இயேசு தமது சீடராக வாழ அழைக்கிறார்.
- நான் இயேசுவோடு இருப்பேன். அவரோடு தங்குவேன்.
- எனது வாழ்வினால் அவரைப் பிறருக்கு அறிவிப்பேன்.

**1. தொடக்கச் செபம்**

அன்பு இயேசுவே! அன்று சீடர்களை நீர் அழைத்தபோது அவர்கள் உம் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து உம்மைப் பின்பற்றி வந்தார்கள். நானும் உமது அழைப்பின் மேன்மையை உணர்ந்து வாழ அருள்தாரும்.

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பாலு வேலை செய்கிறார். அவர் மாதம் ரூ. 15,000/- ஊதியமாகப் பெறுகிறார்.



தனது வீட்டில் அவர் 'முதியவர் சேவை மையம்' என்ற ஒரு நிறுவனத்தை நடத்தி வருகிறார். அங்கே 30க்கும் மேற்பட்ட முதியவர்கள் தங்கி இருக்கின்றனர். முதியவர்களுக்கு உணவளிக்கவும் உதவிகள் செய்யவும் தன்னலமில்லாத இரண்டு செவிலிப் பெண்களை அவர் நியமித்துள்ளார். முதியவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தக்க நேரத்தில் அவர்கள் செய்து கொடுக்கின்றனர். இதனால் முதியவர்கள் முகத்தில் எப்போதும் புன்னகையையே காண முடியும். பாலுவும் தன் நிறுவனத்தைக் குறித்து மகிழ்ச்சியாக இருக்கிறார். சமூக சேவையில்தான் இம்மூவரும் மன நிம்மதியைக் காண்கின்றனர்.

**3. அடையாளத்தை அலசுதல்**

- பாலு நடத்தி வரும் நிறுவனம் செய்யும் பணி யாது?
- செவிலிப் பெண்கள் செய்யும் பணி என்ன?
- சேவை மையத்தில் முதியவர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கக் காரணமென்ன?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

எந்த நிலையில் இருந்தாலும் நம்மால் முடிந்தவரை சமூகத்திற்கு நன்மையே செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு நாம் செய்யும் உதவி கடவுளுக்கே ஆற்றும் தொண்டு.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

மக்களுக்குப் பணிபுரிய வந்த இயேசு தம் பணியை ஆற்ற சீடர்களை அழைத்ததையும் அவர்கள் இயேசுவைப் பின் தொடர்ந்ததையும் படிப்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

ஆசிரியர் திருவிவிலியத்தை உயர்த்திப் பிடித்துக்கொண்டு "இதோ வாழ்வுதரும் இறைவனது வார்த்தை. வாரீர் அஞ்சலி செய்வோம்" என்பார். அவரவர் இடத்தில் இருந்துகொண்டே முன்குறிக்கப்பட்ட சிலர் மலர்கள் தூவுவர். சிலர் ஊதுவத்திப் புகையைக் காட்டுவர். சிலர் எரியும் மெழுகுத்திரிகளை உயர்த்திக் காட்டுவர்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

யோவான் 1:35-51

**8. இறைவார்த்தை விளக்கம்**

- இயேசுவின் காலத்தில் திருமுழுக்கு யோவான் இறைவாக்கினராகப் பணி செய்தார். அவர் தமது பணியின் நிறைவைக் குறிக்கும் வகையில் ஆண்டவர் இயேசுவைத் தமது சீடர்களுக்கு "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி" என்று

அறிமுகம் செய்தார்.

- இயேசுவைச் சீடர்கள் 'ரபி' என்றழைக்கின்றனர். 'ரபி' என்றால் போதகர் என்று பொருள்.
- "தங்கும் இடம் எங்கே?" என்று கேட்ட சீடர்களுக்கு இயேசு 'வந்து பாருங்கள்' என்று பதிலளிக்கின்றார். தம்மோடு வந்து பார்த்து தமது அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றார்.
- ஆண்டவரின் அருள்பிரசன்னத்தில் இருப்பது எத்துணை இன்பமானது. அதைச் சுவைத்த சீடர்கள் அவரோடு அன்று தங்கினார்கள். தாம் பெற்ற இன்பத்தைப் பிறரோடு பகிர்ந்து கொண்டு அந்திரேயா பேதுருவையும், பிலிப்பு நத்தனியேலையும் இயேசுவிடம் அழைத்து வந்தார்கள்.
- 'மெசியா' என்றால் 'அருள்பொழிவு செய்யப்பட்டவர்' என்பது பொருள். அக்காலத்தில் குருக்கள், அரசர்கள், இறை வாக்கினர்கள் தூய எண்ணெயால் அருள்பொழிவு செய்யப் பட்டார்கள். கிறிஸ்துவும் குருவாக, அரசராக, இறை வாக்கினராக இருப்பதால் மெசியா என்றழைக்கப்பட்டார்.
- பழைய ஏற்பாட்டில் நாசரேத்து பற்றிய குறிப்பு இல்லை. அப்படிப்பட்ட அறிந்திராத ஓர் ஊரிலிருந்து நல்லது வரக்கூடுமா? என்று வினவுகிறார் நத்தனியேல்.
- நத்தனியேல் ஒரு விவிலிய அறிஞர். அவர் மெசியாவின் வருகைக்காகக் காத்திருக்கிறார். மெசியாவின் வருகைக்காகக் காத்திருப்போர் அத்தி மரத்தின் கீழ் அமர்ந்திருப்பர். மெசியா வந்திருந்தும் அவருக்காகக் காத்திருந்த நத்தனியேலால் இயேசுவைக் கண்டுகொள்ள இயலவில்லை. எனவே, இயேசு நத்தனியேலின் செயலாலேயே விளக்குகிறார்.
- நத்தனியேலின் ஞானத்திற்கு மேலாக இயேசு பதில் கூறி நத்தனியேலின் வாயை அடைக்கிறார். இதனாலேயே "நத்தனியேல் நீர் இறைமகன்; இஸ்ரயேல் மக்களின் அரசர்; ரபி" என்று பதில் தருகிறார்.
- இயேசு நத்தனியேலை "இவர் உண்மையான இஸ்ரயேலர்" என்கிறார். பழைய ஏற்பாட்டில் யாக்கோபுக்கு 'இஸ்ரயேல்' எனப்பெயர் வழங்கப்பட்டது. "யாக்கோபு என்பதற்கு உண்மை இல்லாதவன், தூய்மையான மனதில்லாதவன்" என்று பொருள். இஸ்ரயேலன் என்றால் உண்மையானவன், கபடற்றவன், தூய்மையானவன் என்று பொருள்படும். நத்தனியேலை இயேசு இவரே உண்மையான இஸ்ரயேலன் என்று கூறுவதன்மூலம் பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துகிறார்.




**9. உய்த்துணரச் செய்தல்**

- இயேசு கூறிய 'வந்து பாருங்கள்' என்ற அனுபவம் எனக்குள்ளும் வர வேண்டும்.'
- சீடத்துவ வாழ்வில்தான் இயேசு அனுபவத்தைப் பெறமுடியும்.

## பாகம் – 2 கலை வழிப் பயிற்சி

**1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. "ரபி" என்ற சொல்லுக்கு பொருள்:
   1) போதனை 2) போதகர் 3) போதித்தல்
2. 'கேபா' என்றால்
   1) மணல் 2) கல் 3) பாறை
3. "அருள்பொழிவு" பெற்றவர் என்பதற்கு
   1) மெசியா 2) மீட்பர் 3) காப்பவர்
4. "நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வர முடியுமோ என்று கூறியவர்:
   1) பிலிப்பு 2) இயேசு 3) நத்தனியேல்
5. பாறை என்பது யாரைக் குறிக்கும்?
   1) பேதுரு 2) பவுல் 3) யோவான்
6. இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி என்று கூறியவர்
   1) தோமா 2) மாற்கு 3) யோவான்
7. "பின் தொடர்ந்து வா" என்று யாரை இயேசு அழைத்தார்?
   1) பிலிப்பு 2) மத்தேயு 3) லூக்கா
8. அந்திரேயா - பேதுரு எவ்வூரைச் சேர்ந்தவர்கள்?
   1. கப்பர்நாகூம் 2) பெத்சாயிதா 3) சமாரியா
9. மெசியா யார்?
   1) இயேசு 2) யாவே கடவுள் 3) தூய ஆவி
10. இதோ! கடவுளின் அட்டுக்குட்டி என்றவர் யார்?
   1) பேதுரு 2) யோவான் 3) திருமுழுக்கு யோவான்



**விடை**

1. போதகர் 2. பாறை 3. மெசியா 4. நத்தனியேல் 5. பேதுரு 6.யோவான்
7. பிலிப்பு 8. பெத்சாயிதா 9. இயேசு 10. திருமுழுக்கு யோவான்

**3. கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் கீழே உள்ள பெயர்களை பொருத்துக.**

- நத்தனியேல் - பிலிப்பு
- அந்திரேயா - பேதுரு - இயேசு

### 3. படகு தன் வரலாறு கூறுதல்

அன்பு குட்டிடீஸ்களே! என் கதைய சொல்றேன் கேளுங்கோ!

நான் சுந்தரவனம் என்ற காட்டில் வளர்ந்தேன். அப்படி வளரும் போது என்னுடைய கனவுகள், எண்ணங்கள் அனைத்தும் என்னவாக இருந்தன என்றால் நான் பெரிய மரமாக வளர்ந்து ஒரு டைட்டானிக் கப்பலாக ஆக்கப்பட வேண்டும். அனைவரும் என்னில் எறி வியப்படைய வேண்டும் என்று கனவு கண்டு வந்தேன். ஒரு நாள் ஒரு மனிதர் கோடறியுடன் வந்து என்னை வெட்டி எடுத்துச் சென்று ஒரு சிறு படகாக அமைத்தார். இதைப் பார்த்தவுடன் எனக்கு அழுகையாக வந்தது. தினமும் எனக்கு அழுகை தான் வந்தது. கண்ணீர் சிந்தினேன். என் கனவெல்லாம் வீணாகிப்போகிவிட்டதே என்று கண்ணீர் வடித்து வந்தேன். அப்படி நான் அழுது கொண்டிருக்கும் போது இருவர் என்னை மீன் பிடிக்கப்பயன்படுத்தினர். மீன்களை சுமக்கும் சிறுபடகாக நின்றேன்.

ஒருநாள் ஒரு மகான் என் மேல் அமர்ந்தார். அவரைச் சுற்றி மக்கள் கூட்டம் நின்றது. அந்த மகான் யார் என விசாரித்தபோது அவர் உலகைப் படைத்த கடவுளின் மகன் இயேசு என்று கூறினர்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எ | வி | ல் | க | உ | ந | ஆ |
| ச | பா | ன | ட் | து | இ | வு |
| ன் | தோ | ள் | பி | டி | ந் | ப |
| கு | னை | டு | ங் | ட | கே | ய |
| வ | ரு | க் | செ | ப் | த | ளி |

**விடை :** 1) என்னைப் பின் செல் 2) வந்துப் பாருங்கள்
3) இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி!



**ஒன்பதாம் நாள்**

அப்போது எனக்கு அளவில்லா மகிழ்ச்சி. நான் நினைத்ததோ சாதாரண டைட்டானிக் கப்பலாக இருக்க வேண்டும் என்றுதான். ஆனால் உலகைப் படைத்த இறைவனை நான் சுமக்கும் பாக்கியம் கிடைத்தால் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தேன். என்னில் இருந்த சீடர் இருவரையும் அழைத்தார். எனவே என்னைப் போன்று உங்களையும் கொடுங்கள் அவர் உங்கள் வழியாகவும் சீடரை அழைப்பார்.

**4. விளையாட்டு (கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களை கொண்டு மூன்று வசனங்களை அமைத்துக் காட்டுக.**

## 9. சவுலின் அழைப்பு

### *பாகம் –1 பாடப் போதனா முறை*

### இறைவார்த்தை

திருத்தூதர் பணிகள் 9:1-9

*(இந்த இறைவார்த்தைப் பகுதியை முன்னதாகவே வாசித்துத் தயார் செய்திடுக).*

### இறைச்செய்தி

- இயேசுவைப் பின்பற்றிய தொடக்கக்காலக் கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தியவர் சவுல்.
- யூதச் சட்டங்களைக் கற்றறிந்த தீவிர பரிசேயர், இயேசுவுக்கு எதிராக வாழ்ந்தவர்.
- இயேசுவின் வார்த்தையைக் கேட்டு மனம் மாறி புதிய வாழ்வு பெற்ற சவுல் பவுல் ஆனார்.
- இயேசுவுக்காகத் துன்பங்களைத் தாங்கிய பவுல், நற்செய்தி அறிவித்து, திருச்சபைகளை ஏற்படுத்தினார்.

### மனநிலை

- கடவுள் திருமுழுக்கு வழியாக என்னையும் தம் பணிக்கு பெயரிட்டு அழைத்துள்ளார்.
- ‘வாழ்வது நானல்ல; என்னில் வாழ்வது கிறிஸ்துவே’ என்று உள்ளத்தில் தாழ்ச்சியோடு வாழ்வேன்.

**1. தொடக்கச் செபம்**

அன்பான இறைவா! உம்முடைய திருமகன் தமது நற்செய்திப் பணியைத் தொடர்ந்தாற்ற புனித பவுலை அழைத்தார். உமது அழைப்பின் மேன்மையை உணர எங்கள் உள்ளங்களைத் தூய்மைப் படுத்தும். எங்கள் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தும். சவுல் பவுலானது போல எங்கள் உள்ளத்தையும் புதுப்படைப்பாக

ஆக்கியருளும். ஆமென்

**2. அடையாளத்தை அறிமுகம் செய்தல்**

வேதநகர் என்ற ஒரு கிராமம். அவ்வூரில் 35 வயது நிரம்பிய ஒருவன் இருந்தான். அவன் பெயர் பில்லா. உண்மைப் பெயர் இதுவரை யாரும் அறிந்ததில்லை. பில்லா என்றால் பேசத்தெரியாத குழந்தை கூட நடுநடுங்கும். குடிவெறி, களியாட்டங்கள் மற்றும் அவனிடத்தில் இல்லாத தீய பழக்கங்களே கிடையாது. பணத்தைக் கொடுத்து விட்டால் எத்தகையக் கொடூரமான செயல்களானாலும் ஈவு இரக்கமின்றி செய்து விட்டு அச்சமில்லாமலிருப்பான். குடும்பத்தில் தன் தாயையும் மனைவியையும் அடித்துத் துன்புறுத்துவான். தெருவில் அவன் வருகிறான் என்றால் ஒரு சிட்டுக்குருவிகூட எதிரே வராது.

அவனுடைய ஒரே மகள் ஒரு நாள் கடுமையான காலரா நோயினால் இறந்து போனாள். பில்லா மனம் உடைந்து நொறுங்கிப் போனான். துன்பம் என்றால் என்ன என்பதை அப்போதுதான் உணர்ந்தான். அவனுக்கு ஆறுதல் அளிக்கக்கூட பயத்தினால் யாரும் வரவில்லை. ஆறுதலின்றித் தவித்தான்; துடித்தான். அப்போது அங்கே வந்த ஒரு பெரியவர் இயேசு பாடுபட்ட படம் ஒன்றைக் கொடுத்துச் சென்றார். அதை உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தான். இப்பாடுகள் எல்லாம் உனக்காகத்தான் என இயேசு மீண்டும் மீண்டும் அவனுக்குச் சொல்வது போல் உணர்ந்து மனம் மாறினான். ஆயுதம் எடுத்த கைகள் பைபிளைத் தூக்கியது. அடித்த கைகள் எல்லாரையும் அரவணைத்தன. கபிரியேல் என்பது அவனது பெயர் என்று அப்போது தான் எல்லாருக்கும் தெரிந்தது.

**3. அடையாளத்தை அலசுதல்**

- ♦ பில்லா எப்படிப்பட்டவனாக இருந்தான்?
- ♦ அவன் வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்தது எது?
- ♦ பில்லா, கபிரியேல் ஆனது எப்படி?

**4. வாழ்க்கை மதிப்பீடு**

கல்லுக்குள் ஈரமுண்டு என்பதைக் கண்களா அறியும்? எப்படிப்பட்ட முரடனுக்குள்ளும் ஒரு நல்ல குணம் இருக்கத்தான் செய்கிறது.

**5. இறைவார்த்தைக்கு அழைத்துச் செல்லுதல்**

கிறிஸ்துவர்களைக் கொலை செய்யும் வெறியோடு கடிதம் வாங்கிச் சென்ற சவுலை ஆண்டவர் எவ்வாறு ஆட்கொண்டு தம் பணிக்கு அழைத்தார் என்று இப்பகுதியில் காண்போம்.

**6. இறைவார்த்தைக்கு அஞ்சலி**

அலங்கரிக்கப்பட்ட திருவிவிலியத்தின் அருகில் மாணவர்



பிரநிதிகள் நான்கு பேர் நிற்பர். முதல் நபர் திருவிவிலியத்தைத் தொட்டு நெற்றியில் தம் கைகளை வைப்பார். அப்போது இறைவா உமது வார்த்தையால் எனது நினைவுகளைத் தூய்மையாக்கும் என்பார். வகுப்பிலுள்ள எல்லா மாணவர்களும் அப்படியே செய்வர். இரண்டாவது நபர் விவிலியத்தின் மீது தம் கைகளை வைத்து கண்களில் ஒற்றி "ஒளியான வார்த்தையே இறைவா எனது கண்களால் நல்லவற்றையே காண ஒளிதாரும்" என்பார்.

மூன்றாம் நபர் வாயில் தம் கைகளை வைத்து "உண்மையான வார்த்தையே இறைவா எப்போதும் நான் உண்மையே பேசிட உமது உண்மையின் வார்த்தைகளால் என்னை நிரப்பும்" என்பார்.

நான்காம் நபர் நெஞ்சில் கைகளை வைத்து "அன்பின் நிறைவான வார்த்தையே இறைவா! உமது வார்த்தையினால் என்றும் என்னோடு தங்கியிருந்து நான் அன்பில் வளர்ந்தோங்கச் செய்வீராக" என்பார்.

**7. இறைவார்த்தை முழக்கம்**

திருத்தூதர் பணிகள் 9:1-9


**8. இறைவார்த்தை விளக்கம்**

- ❖ சவுல் கி.பி. 10ஆம் ஆண்டில் பென்யமின் குலத்தைச் சார்ந்த யூதக் குடும்பத்தில் பிறந்தார். இன்றைய துருக்கி நாட்டின் பகுதியான சிலிசியா மாநிலத்தின் தர்சு நகரத்தில் இவரது குடும்பம் வாழ்ந்து வந்தது. செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்த இவரது குடும்பம் உரோமைக் குடியுரிமையைப் பெற்றிருந்தது. இவர் இளமையிலிருந்தே யூதச் சட்டங்களையும் நெறிமுறைகளையும் கற்றறிந்தார். அன்று உலகப் பொது மொழியாய் இருந்த கிரேக்கத்தையும் இலத்தீனையும் கற்றுத் தேர்ந்தார். எருசேலமில் புகழ் பெற்ற கமாலியேல் என்னும் யூத ரபியிடம் கல்வி பயின்றார். இயேசு வாழ்ந்த காலத்தில் இவர் பாலஸ்தீனத்தில் வாழ்ந்திருக்கலாம் என்றும் கூறுவர்.
- ❖ தொடக்கக்காலக் கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தும் கூட்டத்தில்தான் நாம் இவரைச் சந்திக்கிறோம். திப 8:1இல் ஸ்தேவானைக் கல்லெறிந்து கொல்வதற்கு இவர் உடன் பட்டிருந்தார் என்று பார்க்கிறோம். கிறிஸ்துவர்களைத் துன்புறுத்துவதற்காகத் தமஸ்கு நகருக்குச் செல்லும் வழியில் கிறிஸ்து இவரைத் தடுத்து ஆட்கொண்டார். அனனியா என்ற கிறிஸ்துவர் வழியாக பிற இனத்தவர்க்கு நற்செய்தி அறிவிக்கும் திருத்தூதராகக் கிறிஸ்து அழைப்பதை அறிந்து கொண்டு இவர் தன்னை அர்ப்பணித்தார். சமயப்பற்றும் சட்டப் பற்றும் மிக்கவராக இருந்த சவுல் கடவுளின் பேரருளைப் பறைசாற்றும் திருத்தூதரானார். முதலில் அரேபியாவுக்குச் சென்று தம்மைத் தயார் செய்து கொண்டார். பின்னர் தமஸ்கு மற்றும் எருசலேம் பகுதியில் தம் பணியைத் தொடங்கினார்.
- ❖ கடின இதயம் கொண்ட சவுலின் உள்ளம் மென்மையான

இயேசுவின் வார்த்தைகளால் மாறியது. மனமாற்றம் அடைந்தார். அவரது முழு வாழ்க்கையே மாறியது. சவுல் பவுல் ஆனார். பார்வையற்றிருந்த பவுலுக்கு அனனியா வழியாகப் புதிய பார்வையைக் கொடுத்துத் தூய ஆவியார் அவரை உறுதிப்படுத்தினார். கிறிஸ்துவை அறியாத பிறமத மக்களுக்கும் யூத மதத்தவர்களுக்கும் கிறிஸ்துவை மாண்புடன் அறிவித்தார் (காண். கலா 1:15-16).

**9. உய்த்துணரச் செய்தல்**


- ✷ பிறரைத் துன்புறுத்துவது கிறிஸ்துவையே துன்புறுத்துவதாகும்.
- ✷ நான் என் வாழ்வில் நற்செய்திப்பணிக்கு முதலிடம் கொடுப்பேன்.
- ✷ நற்செய்திப்பணியின்போது வரும் துன்பங்களை மனமகிழ்வோடு ஏற்றுக்கொள்வேன்.




## பாகம் – 2 கலை வழிப் பயிற்சி

**1. சரியா? தவறா?**

1. சவுல் தமஸ்குவை நெருங்கியபோது நெருப்புச் சுடர் அவரைச் சூழ்ந்து வீசியது. **சரி / தவறு**
2. சவுல் ஐந்து நாள்கள் பார்வையற்றிருந்தார். **சரி / தவறு**
3. சவுல் பார்வையற்றிருந்த நாளில் அவர் திரவ உணவு மட்டுமே அருந்தினார். **சரி / தவறு**
4. சவுலுடன் பயணம் செய்தோரும் ஆண்டவரின் குரலைக் கேட்டனர். **சரி / தவறு**
5. சவுல் ஆண்டவரின் சீடர்கள்மேல் பரிவுள்ளவராய் இருந்தார். **சரி / தவறு**





**விடை : 1) தவறு 2) தவறு 3) தவறு 4) சரி 5) தவறு**

**2. விளையாட்டு**

சவுல் - தமஸ்கு - இயேசு - தலைமைக்குரு என்று துண்டு சீட்டில் எழுதி சீட்டுக்களை ஒரு டப்பாவில் போட்டு கொண்டு ஒலி நாடாவில் பாடலைப் போடவேண்டும். மாணவர்கள் வட்டத்தைச் சுற்றி வரவேண்டும். திடீரென பாடலை நிறுத்த வேண்டும். எல்லாரும் வட்டத்தின் உள்ள நான்கு பிரிவில் ஏதாவது ஒன்றில் நிற்க வேண்டும். டப்பாவில் உள்ள சீட்டில் ஒன்றை எடுக்க வேண்டும். அதில் குறிக்கப்பட்டிருக்கும் பெயருக்கு பொருத்தமானவர் அனைவரும் உள்ளே இருக்க வேண்டும். மற்றவர்கள் (அவுட்) வெளியே செல்ல வேண்டும். அந்த சீட்டை எடுப்பவர் வட்டத்தின் நடுவில் நிற்பார். பின் ஒவ்வொருவராக மாற்றி மாற்றி நிற்க வேண்டும்.

**3. குறுக்கெழுத்துப் போட்டி**

**இடமிருந்து வலம்**

1. அவர் ------- நகர் செல்ல விரைந்தார்.
2. தம்மோடு பேசும் ------- ஒன்றை கேட்டார்.
3. ------- திறந்திருந்தும் பார்க்க முடியவில்லை.

**வலமிருந்து இடம்**


4. ------- பார்வையற்றிருந்தார்.
9. திடீரென வானத்திலிருந்து தோன்றிய ------- அவரை சூழ்ந்தது.

**மேலிருந்து கீழ்**

5. அவர் மிகவும் சிறந்த -------யில் ஏறினார்.
6. நீ எழுந்து ------- செல்.

**கீழிருந்து மேல்**

8. அவர் உண்ணவுமில்லை ------- இல்லை.
10. அவருடைய கையில் ------- இருந்தது.



**இடமிருந்து வலம்**

1. தமஸ்கு 2. குரல் 3. கண்கள்

**வலமிருந்து இடம்**

4. மூன்று நாள் 9. ஒளி

**மேலிருந்து கீழ்**

5. குதிரை 6. நகருக்குள் 7. தரையிலிருந்து

**கீழிருந்து மேல்**

8. குடிக்கவும் 10. வாள்

# ஆயரின் ஆசியுரை

“விவிலியத்தை அறியாமல் இருப்பது கிறிஸ்துவையே அறியாமல் இருப்பதாகும்” என்றார் புனித எரோணிமு.

“விவிலியத்தைப் படித்தறிய கிறிஸ்தவர்களுக்கு அதிக வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும்” என்று அறிவுறுத்துகிறது இரண்டாம் வத்திக்கான் சங்கம் (காண்க : இறைவெளிப்பாடு எண் 22).

பற்பல முறையிலும் பல்வேறு வகையிலும் இறைவாக்கினர் வாயிலாகப் பேசிய கடவுள், “இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்” (எபி 1:1-2). என்றும் வாழும் இறைவாக்காகிய அவருடைய மகன் எல்லா மனிதருக்கும் ஒளியாய் இருக்கிறார். அவர் மக்களிடையே வாழ்ந்து தம் உள்ளார்ந்த உண்மைகளை அவர்களுக்கு எடுத்துரைக்கும்படி (காண்க: யோவா 1:1-18) கடவுள் அவரை அனுப்பினார். ஆகவே மனிதரான வார்த்தையும் “மனிதருக்காக” அனுப்பப்பட்டவருமான இயேசு கிறிஸ்து “கடவுளின் வார்த்தையைப் பேசுகிறார்” (யோவா 3:34); தந்தை அவருக்கு அளித்த நிறைவாழ்வுப் பணியை நிறைவேற்றுகிறார் (காண்க : யோவா 5:36; 17:4). இயேசு கிறிஸ்துவைக் காண்பது தந்தையைக் காண்பதாகும் (காண்க: யோவா 14:9) (எண் 4) என்றார்.

ஆகவே, மனித குல வாழ்வுக்கு ஒளியும் வழியும் உண்மையுமான இயேசு கிறிஸ்துவை இன்னும் ஆழமாய் அறிவதற்கு தூய ஆவியின் துணையுடன் இறைவார்த்தையை நாட வேண்டும். “திருச்சபை நம் ஆண்டவரின் திருவுடலுக்கு (நற்கருணை) வணக்கம் செலுத்துவது போலவே விவிலியத்திற்கும் என்றும் வணக்கம் செலுத்தி வந்துள்ளது” (எண் 21) என்பதையும் உணர்ந்து கிறிஸ்தவ அருள் வாழ்வில் இறைவார்த்தைக்கு உரிய இடத்தைத் தரவேண்டும்.

**விடுமுறை விவிலியக் கல்வி** (VBS) என்னும் இச்சிறப்பான திருப்பணி நமது குழந்தைகள் இறைவார்த்தையின் ஆற்றலைக் கண்டுணர பெரிதும் துணைபுரிகிறது. இதை உருவாக்க உழைத்தவர்களையும் மேலும் இதைப் பயன்படுத்திக் கற்றுக்கொடுக்கும் தன்னார்வப் பணியாளர்களையும், பயன்பெறும் சிறுவர், சிறுமியர், இளையோர் அனைவரையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

இயேசுவில் அன்புள்ள,<br>
**+ செ. சூசைமாணிக்கம்**<br>
*சிவகங்கை ஆயர்*<br>
தலைவர்,<br>
தமிழக விவிலியப் பணிக்குழு

**19 மார்ச்**<br>
புனித யோசேப்புப் பெருவிழா

# நன்றியுரை

கோடை காலம். எல்லாருக்கும் விருப்பமான காலம் இது. ஆண்டு முழுவதும் படிப்பு, வேலை என்று பம்பரமாய்ச் சுற்றிவந்த அனைவருக்கும் சற்று ஓய்வு தரும் காலம். ஒவ்வொரு ஆண்டும் படிப்பை முடித்துவிட்டு மாணவச் செல்வங்கள் பல்வேறு இடங்கள் செல்வதும் பல்வேறு காரியங்களில் ஈடுபடுவதும் வழக்கம். கோடை விடுமுறையில் நமது கிறிஸ்தவக் குழந்தைகள் உல்லாசமாய்த் திரிந்து பொழுதைப் போக்காமல் மிகவும் பயனுள்ள முறையில் அதை செலவழிக்கும் பொருட்டும், விவிலியத்தை முழுவதும் அறிந்து கொள்ளும் பொருட்டும் உருவாக்கப்பட்டதே **“விடுமுறை விவிலியக் கல்வி”** (VBS) என்னும் உயரிய திட்டம்.

ஏறக்குறைய கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக ஆங்காங்கே தொடங்கப்பட்டு நடத்தப்பட்ட இக்கோடைகால விவிலிய வகுப்புகள், ஆலமரமாய் வளர்ந்து இன்று தமிழகம் முழுவதற்கும் பயனளிக்கும் **விடுமுறை விவிலியக் கல்வி**த் திட்டமாக உருவெடுத்துள்ளது.

இக்கல்வி இந்த அளவு வளர்வதற்கு பலரும் இதன் பின்னணியில் இரவு பகலாக உழைத்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் நன்றிப் பெருக்கோடு நினைவு கூறுகிறோம். மிகக் குறிப்பாக தமிழக விவிலியப் பணிக்குழுவில் செயலாற்றிய அருள்தந்தையர்கள் வ.மரியதாசன், பீட்டர் அபீர், ஜோமிக்ஸ், பூவிருந்தவல்லி, புனித பவுல் விவிலிய நிலையத்தில் தங்கி ஓராண்டு விவிலியம் பயின்று வெளிவந்த முதல் குழு வேதியர்கள், அருள்பணி. இரா. மரிய டெல்லஸ், விவிலியத்தில் ஆர்வமுள்ள பல்வேறு தந்தையர்கள், இவ்வரிய பணிக்கு ஒத்துழைப்பு வழங்கிப் பாடநூல் என்ற உருவாக்கம் கொடுத்தவர்கள் என பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம். இவர்களின் உழைப்பு விலைமதிப்பற்றது. இவ்வுழைப்பு சிறுவர்களுக்கான விவிலிய மற்றும் மானிட உருவாக்கத்தில் வரலாற்றுத் தடயத்தைப் பதித்துள்ளது என்றால் மிகையாகாது.

கடந்த 2003-ஆம் ஆண்டு முதல் அனைத்து மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுச் செயலர்களின் பரிந்துரையை ஏற்று, விடுமுறை விவிலியக் கல்விக்கான (VBS) துணைக்கருவிகள் தயாரிக்கும் பொறுப்பை தமிழக விவிலியப் பணிக்குழு ஏற்று செய்து வருகின்றது. துணைக்கருவிக்கான பாடநூல்களை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை சிறப்பாக முப்பணி மையம் செய்து வருகின்றது. இன்று நம் கையில் கிடைக்கப்பெறும் துணைக் கருவிகள் உருவாக பலரும் உதவியுள்ளனர். அவர்கள் அனைவரையும் நன்றியோடு நினைவுகூற விரும்புகிறோம். மிகக் குறிப்பாக அருள்சகோதரி பெரேரா, P.நெல்சன், வேதியர்கள் திரு. T. தாமஸ், திரு. T.M. சந்தியாகு, வேதியர் S. இருதயசாமி, பேராசிரியர் திரு. ஜோ. பீட்டர் ராஜா, திரு. ஆரோக்கியசாமி, திருமதி. ரெஜினா மேரி, திரு. டொமினிக், செல்வி அமலா மிசாயேலா, கணினியில் பதித்த திருமதி. மேரி ஸ்டெல்லா, ஓவியர் திரு. நிர்மல், பாடல்கள் உருவாகிட உதவியவர்களுக்கும் மற்றும் இசை அமைப்பாளர் ஆகியோருக்கும் உளம் கனிந்த நன்றி.

விடுமுறை விவிலியக் கல்வித் திட்டம் உருவாக்கப்பட்ட காலந்தொட்டே இப்பணியில் ஈடுபட்டு மாநில அளவில் செயலாற்றி உழைத்த முன்னாள் விவிலியப் பணிக்குழு செயலர்கள் அனைவருக்கும் அச்சிட்டு பரவலாக்கும் பணிகளைத் திறம்படச் செயல்படுத்தும் அருள்பணி. ம. பிலோமின்தாஸ் இயக்குநர் அவர்களுக்கும் நன்றிகள் பல.

இறைவாக்குப் பணியில் தந்தையின் கரிசனையோடு எப்பொழுதும் ஆதரவளித்து ஊக்குவிக்கும் தந்தையின் உள்ளம் கொண்ட தமிழக விவிலியப் பணிக்குழுவின் தலைவர், **சிவகங்கை ஆயர் மேதகு சூசை மாணிக்கம்** ஆண்டகைக்கும் எம் இதயம் நிறைந்த நன்றி.

இயேசுவின் காலத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அவரிடம் அழைத்து வந்தனர். ஆசிரைப் பெற்றுக்கொண்டனர். அதுபோல நாமும் நம் குழந்தைகளை அழைத்து வருவோம்.

முப்பணி மையம்<br>
திண்டிவனம்<br>
2017

***அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்***<br>
*பொதுச் செயலர்*<br>
*தமிழக விவிலியப் பணிக்குழு*